பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 31 வெள்ளிக்கிழமை (13.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 198

## வடக்கு யுத்தத்தில் இறுதி இலக்கை அடைய இன்னும் 21 கிலோ மீற்றர் மட்டுமே உள்ளது

கொழும்பு, ஜூன் 13

வடக்கு நோக்கிய யுத்தத்தில் இறுதி இலக்கை அடைவதற்கு இன்னும் '21 கிலோ மீற்றர்கள் மட்டுமே உள்ளன.

இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்திருக்கிறார். ஸ்ரீலங்காப் படையினர் கிழக்கை மீட்டது போல் வடக்கையும் மீட்பர். முல்லைத்தீவை மீட்பதற்கு பல முனைகளில் ஸ்ரீலங்காப் படையினரின் 56, 57, 58, 59வது படைப்பிரிவுகளும் அதிரடிப்படையின ரும் ஈடுபட்டுள்ளனர். படையினர் தமது இறுதி இலக்கை எட்ட இன்றும் 21 கிலோ மீற்றர்கள் மட்டுமே இருக்கின்றன.

இது வரை விடுதலைப்புலிகளின் ஒன்று தொடக்கம் நான்கு முகாம்களை படையினர் தாக்கத் தொடங்கியுள்ளனர்.

படையினர் பல நூற்றுக்கணக்கான சதுர கிலோ மீற்றர்களைக் கைப்பற்றியுள்ளனர்.

கிழக்கைப் போன்று வடக்கையும் படையினர் வெற்றிகரமாக மீட்பர்-



வன்னிப் படை யெடுப்பில் ஈடு பட்டுள்ளபடையினர் சிறந்த மனதைரியத்துட னும் விட்டுக்கொடுப்புடனும் தமது நடவ டிக்கை களை மேற்கொண்டு வருகின்றமை நாம் பெற்றுள்ள வெற்றிகளுக்கான முக்கிய காரணமாகும் என்று இராணுவத் தளபதி 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தின் சிங்கள நாளி தழான 'தினமின'வுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார். (அ)

## பிரபாவை மடக்கிப் பிடிப்பதற்காக முல்லையில் பெரும் படை நடவடிக்கை!

### இராணுவத் தளபதி தகவல்

கொழும்பு, ஜூன் 13

''விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைதுசெய்வதற்காகவே பாதுகாப்புப் படையினர் முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள பல்வேறு முனைகளில் தற்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.''

- இப்படி இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா சிங்கள நாளிதழான 'தினமின' விற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார் என்று பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இராணுவத் தளபதி 'தினமின'விற்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த மாதத்தில் மட்டும் 18 சம்பவங்கள்

# காணாமற்போகச் செய்யப்படுவோர் எண்ணிக்கை இங்கு திடீர் அதிகரிப்பு!

### ஐ.நா.செயற்குழு கவலை வெளியிடுகின்றது

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் ஆள்களைக் காணாமற்போகச் செய்யும் கொடுமை திடீரென்று அதிகரித்துள்ளதாக - பலவந்தமாக அல்லது சுயவிருப்பின்றி காணாமற்போகச் செய்தல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு கவலை வெளியிட்டுள்ளது.

கடந்த மே மாதத்தில் மட்டும் 18 ஆள்கள் பலவந்தமாக கடத்தப்பட்டு காணாமற் போகச் செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் அந்தக் குழு கடும் விசனம் தெரிவித்திருக்கிறது.

காணாமற்போகச் செய்தல் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகள் இலங்கையில் சிறிதளவும் இடம்பெறவில்லை என்று ஐ.நா.குழு கண்டித்துள்ளது.

காணாமற்போனவர்களின் நிலை மற்றும் அவர்களது உறவினர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பவற்றை அறிந்து குடும்பங்களுக்கு உதவும் நோக்குடன் 1980 இல் அப்போதைய ஐக்கியநாடுகள்மனிதஉரிமை ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட செயற்குழுவே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது. அக்குழு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த இரு மாதகாலப் பகுதியில் மாத்திரம் 22 சம்பவங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு செயற்குழு இலங்கை அரசைக் கோரியுள்ளது.

இதில் 18 காணாமற்போதல் சம்பவங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்த தானம் செய்யுமாறு கொடையாளருக்கு அழைப்பு

உலகெங்கிலும் நாளை 14 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற சர்வதேச குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு நாளையதினம் யாழ். ஆஸ்பத்திரியில் இரத்ததானம் மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் குருதியின் தேவை மேலும் அதிகரித்துள்ளதால் தன்னார்வக் குருதிக்கொடையாளர்களை இத்தினத்தில் இரத்த தானத்தை மேற்கொள்ளுமாறு யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கி அதிகாரி டாக்டர் இ.சிவசங்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## புதுக்குடியிருப்பில் விமானக் குண்டு வீச்சு

கொழும்பு, ஜூன் 13

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, உடையார் கட்டுக்குளம் பகுதி மீது நேற்று பிற்பகல் 3.15 மணியளவில் விமானப்படையினரின் கிபிர் விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதல்களை நடத்தின.

உடையார் கட்டுக்குளத்தில் இருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விடு தலைப் புலிகளின் ஆயுதக் களஞ்சியம் மீதே இத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு நோர்வேத் தரப்பினர் செல்ல அனுமதி இல்லை என்கிறது இலங்கை அரசு

### புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தாலேயே பேச்சு

கொழும்பு, ஜூன் 13

நோர்வேயின் சமாதான அனுசரணையாளர்கள் வன்னிக்குச் செல்வதற்கு அனுமதிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ள அரசு, விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தாலேயே மீண்டும் பேச்சு எனவும் கூறியுள்ளது.

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ரஜீவ விஜேசிங்க ரொய்ட்டருக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் விசேட சமாதானத் தூது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிராமசேவையாளர் நேர்முகப்பரீட்சை 23ஆம் திகதி முதல் யாழ்.செயலகத்தில்!

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்.மாவட்டத்தில் நிலவும் கிராம சேவையாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கென நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் 127 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கள் எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தெஹிவளையில் 22 தமிழர்கள் கைது

கொழும்பு, ஜூன் 13

தெஹிவளைப் பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரப் பகுதியில் இன்று இரவு 9மணி முதல் ஊரடங்கு அமுல்

யழ்ப்பாணம், ஜூன் 13

பாஷையூர் அந்தோனியார் ஆலய உற்சவத்தை ஒட்டி யாழ்.நகரப் பகுதியில் மட்டும் இன்று இரவு 9மணிமுதல் ஊரடங்கு நடை

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# டாக்டரின் சீட்டு இன்றி மருந்து விற்பனை செய்வதற்கு குடாநாட்டில் இன்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது

## சுகாதாரப் பணிப்பாளர் அறிவிப்பு

குருநகர், ஜூன்13

யாழ். மாவட்டத்திலுள்ள ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களில் இன்று தொடக்கம் வைத்திய அதிகாரிகளின் மருந்து விவரச்சீட்டு இன்றி மருந்துகள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள மருந்தக உரிமையாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது உரை நிகழ்த்திய யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

கலந்துரையாடல் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக மாவட்ட மருந்தாளர் ஆர். குமாரதாசன், உணவு மருந்துப் பரிசோதகர் எஸ்.மகாதேவன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் உரைநிகழ்த்திய யாழ். பிராந்திய சுகதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் , யாழ். மாவட்டத்திற்கான மருந்துகளை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கு தனியார் சிலருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் பொதுமக்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் மருந்து கிடைக்க உறுதி செய்யவேண்டும். மருந்துகளை சரியான முறையில் நியாயமான விலையில் மக்களுக்கு கிடைக்கவேண்டும் என்பதே எமது நோக்கம் - என்றார். (51)

## மாகாண சபைகளின் தேர்தல் ஓகஸ்டில்

கொழும்பு, ஜூன் 13

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு கலைக்கப்பட்ட சப்ரகமுவ, வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் ஓகஸ்ட் மாதத்தி லேயே நடைபெறும் எனத் தேர்தல் திணைக் களத்தை மேற்கோள் காட்டி அரசின் உத்தியோகபூர்வ இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கும், வாக்களிப்பதற்குமான திகதிகளை ஜூன் 16 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் திணைக்களம் அறிவிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்மொழித் தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்13

வடமராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகள் நாளை ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

வட இந்து மகளிர் கல்லூரியில் நாளை சனிக்கிழமை எழுத்தாக்க நிகழ்வுகள் (எல்லாம்), வாசிப்பு-பிரிவு I+II, கதை கூறல் (ஆக்கத்திறன்) I ஆகிய போட்டி களும்-

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நாடகம் (திறந்த போட்டி), வில்லுப்பாட்டு (திறந்த போட்டி), விவாதம் (திறந்த போட்டி) ஆகிய போட்டிகளும்-

எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை நாட்டுக்கூத்து (சகல வகைகளும்), தமிழறிவு வினாவிடை (திறந்த போட்டி) ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன.

வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை இசை - தனி நிகழ்வுகள், இசையும் அசைவும் (இசை 2-5 பிரிவுகள்), நடனம்- தனி (1-5 பிரிவுகள்) ஆகிய போட்டிகளும்-

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இசை - குழு I+II, நடனம் - குழு I+II ஆகிய போட்டிகளும் நடைபெற வுள்ளன.

வலய நிலைப் போட்டிகளில் பங்கு கொள்ளத் தகுதியானவர்கள் பொறுப்பா சிரியர்களுடன் போட்டி நடைபெறும் இடங்களுக்கு காலை 8.30 மணிக்கு முன்னர் வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா கேட்டுள்ளார். (202)

* * *

கோப்பாய்கோட்ட தமிழ்மொழித்தினப் போட்டி இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் எழுத்தாக்கப்போட்டி இடம் பெறும். ஏனைய போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும் என்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

* * *

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான தமிழ்த் தினப்போட்டி நிகழ்வுகள் நாளை சனிக்கிழமையும் மறுதினமும் இணுவில் மத்திய கல்லூரியில் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளன .

நாளை சனிக்கிழமை எழுத்தாக்கம் மற்றும் தனி நிகழ்வுகளும் ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கூத்து நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ளும் பாடசாலைகளை உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. (1-86)

## இன்றைய ஆட்டம்

மாலிசந்திமைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15 ஆவது ஆண்டு விழாவையொட்டி நடத்தப்பட்டுவரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது.

நாளை காலை 8 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவாணந்த விளையாட்டுக் கழகமும் பி.ப. 3 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

(218)

## தங்கம்மா அம்மையாருக்கு சுகம் வேண்டி பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஜூன்13

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அம்மையாருக்கு பூரண சுகம் வேண்டி துர்க்கையம்மன் ஆலயத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு விசேட அபிஷேகம், பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளன.

இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம் பெறுகிறது.

(1)

## யாழ்.பல்கலையில் காந்தி திரைப்படம்

யாழ்ப்பாணம், ஜூன்13

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் காண்பிக்கப் பட்டுவரும் கல்வி - கலைத் தத்துவம்சார் பட வரிசையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு காந்தி திரைப்படம் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

உலகின் சிறந்த நடிகருக்கான விருது பெற்ற பென் இங்ஸ்லியின் நடிப்பிலும் உலகின் சிறந்த நெறியாளருக்கான விருது பெற்ற அன்ரன் பரோவின் இயக்கத்திலும் உருவான இத்திரைப்படம் எட்டு சர்வதேசவிருது களை வென்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றை சித்திரிக்கும் இத் திரைப்படத்தை ஆர்வலர்கள் எவரும் பார்வையிடலாம் என அறிவிக்கப்படுகிறது.

(2)

## தெல்லிப்பழை புற்றுநோய் கதிர்வீச்சுப் பிரிவு இன்று முதல் மீண்டும் இயங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 13

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் செயற்பட்டு வந்த புற்றுநோய் கதிர் வீச்சுப் பிரிவினை மீள செயற்படுத்துவதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனடி நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் கடந்த 09 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டிருந்த புற்று நோய் கதிர்வீச்சுப் பிரிவு இன்று முதல் மீள செயற்படுத்தப்படவுள்ளது.

இதே நேரம் மேற்படி பிரிவில் கதிர்வீச்சாளர்களின் பற்றாக்குறையை நீக்கும் முகமாக கண்டி, பதுளை, மகரகம மற்றும் காலி மருத்துவ மனைகளில் பணியாற்றி வருகின்ற தமிழ் மொழி பேசும் கதிர்வீச்சாளர்களைச் சுழற்சிமுறையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளதுடன் .இதுகால வரையில் கதிர்வீச்சாளராகப் பணியாற்றி வந்துள்ள இராமலிங்கம் என்பவரை தொடர்ந்து பணியில் அமர்த்துவதற்கும் அவருக்கான ஊதியத்தை மாகாண சபையின் மூலமும் தனிப்பட்ட ரீதியில் தனது நிதியிலிருந்தும் வழங்குவதற்கு அமைச்சர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் இன்று முதல் யாழ். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் கதிர்வீச்சுப் பிரிவு செயற்படும் என்பதையும் சிகிச்சை இடைநிறுத்தப்பட்டுள்ள நோயாளர்களும் ஏனைய புதிய நோயாளர்களும் தங்களுக்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள இயலும் என்றும் அறிவுறுத்தப்படுகின்றனர். (1)

## தரம் 5மாணவர்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்த விசேட திட்டம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

தரம் 5ல் கல்வி பயிலும் மாணவர்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சி திட்டத்தையும் பயிலமர்வையும் யாழ். வலய வள நிலையம் ஆரம்ப பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் தலைமையில் முன்னெடுக்கப்பட உள்ளதாக வளநிலையப் பொறுப்பாளர் ஞா.இரத்தினசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இ.ஆர்.எ. செயல்திட்டத்திற்கு அமைவாக தரம் 5 பாடத் திட்டத்தில் உள்ள விஞ்ஞான பாடப் பரப்பில் செயல் முறைப் பயிற்சிகள் வழங்கப்படும்.

நாளை சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நல்லூர் கல்விக் கோட்டத்தில் இருந்து தெரிவு செய்யப் பட்ட 200 மாணவர் களுக்கும்-

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப் பாணக் கோட்டத்தை சார்ந்த மாணவர்கள் 200 பேரு க்கும்- இந்தப் பயிற்சிகள் வழங்கப்படும்-

கோப்பாய் கோட்டத்தை சார்ந்த மாணவர்களுக்கு அடுத்து வரும் சனி ஞாயிறு தினங்களில் கோப்பாய்க் கோட்ட மண்டபத்தில் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உரிய நேரத்தில் தவறாது சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கானஅனுசரணையை வலயப் பணிமனை முழுதாக பொறுப்பேற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக் கதாகும்.

(1-302)

## மரண அறிவித்தல்

### *செல்லத்துரை இராசமணி (செல்லக்கிளி)*



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மாகியம்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசமணி (செல்லக்கிளி) நேற்று (12.06.2008) இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் துரை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத் துரையின் அன்பு மனைவியும், சுலோசனா, தேவி (டுபாய்), மோகன், சந்திரராசா (ப.நோ. கூ.சங்கம், அளவெட்டி), கலாவதி, ரமேஷ் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும் சிவஞானம் (டுபாய்), நேசரத்தினம், புஸ்பராணி, சுதர்சினி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியும் இரரசாத்தி, பாலசிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு சகோதரியும் திவியா, ஜெனிதா, ரேணுகா, தனுஷன், திவேசன், மதிசன், பர்மிகா, அபனேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2008) வெள்ளிக் கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்துப்பனை இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாகியம்பதி,*
*சண்டிலிப்பாய்.*

(75291)

தகவல்:
பிள்ளைகள்.


## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் 1974 M.B.B.S Doctor (சைவம்), 1978 B.sc (சைவம்), 1974 குவைத் எஞ்சினியர் (சைவம்), 1971 லண்டன் சிற்றிசன், 1969 லண்டன் சிற்றிசன், 1973 கனடா சிற்றிசன் இன்னும் பல சாதகம் இருக்கின்றன.

**திருஷ்ணா திருமண சேவை,**
*"அன்னை இல்லம்", செங்குந்த வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு.* T.P.: 021 222 9032

(75254)

## உடன் தேவை

கொழும்பில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொழும்பு வீதிகளில் நன்கு பரிச்சயமுள்ள ஓட்டோ சாரதி தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் சுய விவரக்கோவையுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

83D,ஹம்டன் ஒழுங்கை,
கொழும்பு - 6
011 2366042 (சி-553311)

## போட்டிப் பரீட்சைக்கான விசேடவழிகாட்டல் வகுப்பு

பொது உளச்சார்பு , பொது அறிவு, மொழித்திறன்
ஆரம்பம் - சனி (14.06.2008)
பி.ப. 2.30 சனி. ஞாயிறு 2.30 - 4.30
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக)

(சி-5533312)

A/L(Maths)ல் 03 பாடங்களில் சித்தியுண்டா? இந்தியாவில் உயர்கல்வி
2012 MAYல் நீங்களும் ஒரு பொறியியலாளர்
இதோ உங்களுக்கு பொறியியல் அனுமதி
**Be An Engineer in 2012 May**

Cousers Offered:
Bachelor of Engineering (BE)
- Civil Engineering - Mechanical Engineering - Electronics & Communication Engineering - Information Technology
- Electrical & Electronics Engineering - Computer science & Engineering - Fashion Technology
- Post Graduate courses (ME)
- M.B.A(Master of Business Administration) - M.C.A (Master of Computer Applications)

இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட All India Council For Technical Education (AICTE)இனால் வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கான சான்றிதழ் வழங்கப்பட்ட தமிழ்நாட்டில் உள்ள 04 கல்லூரிகளில் sonaவும் ஒன்று

ELEGIBILITY A/L 3 PASSES (Maths Stream)
உடனடி அனுமதிகள்
SPOT ADMISSION GIVEN
[illegible]

SUNTHARALINGAM SAJIVAN ECE (B.E) St. Michel's College Batticalo.
PALANIPPILLAI SENTHILLAPAN IT (B.Tech) St.John's College Jaffna.
KAARUNYAA SIVARATNAM IT (B.Tech) Chundikuli Girls' College Jaffna.
SIVAKUMARAN VIDIYABUSHAN IT (B.Tech) St.John's College Jaffna.
KANTHIMATHINATHAN KAMALNATH ECE(B.E) Bambalapity Hindu College, Colombo.
கடந்த ஆண்டு பொறியியல் கற்கையில் இணைந்த உங்கள் சகோதரர்கள்

For more information & Spot admission;-
Mr.T.Elankeethan(Jaf)
Tel - 0212228374
Mobile - 0775936343
Mr.S.Jeyakanth(Col)
Mobile - 0773867257
v4educationalconsultancy@gmail.com

V4 EDUCATIONAL CONSULTANCY PRIVATE LIMITED

SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India.

தொடர்புகட்கு: The Express Institute Irupalai, Kopay Tel:0212225840


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் பொருளாதார, போக்குவரத்துப் பிரச்சினைகள் நோயாளரையும் பாதிக்கின்றது

## வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி சுட்டிக்காட்டுகிறார்



நல்லூர்,ஜூன்13

குடாநாட்டில் தற்போது நிலவி வரும் பொருளாதார மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகள் நோயாளர்களையும் பெரிதும் பாதிக்கின்றன. இந்நிலையில் இங்கு திறந்துவைக்கப்பட்டுள்ள புற்றுநோய் மருந்துச் சிகிச்சை நிலையம் குறிப்பிட்ட நோயாளிகளுக்கு பேருதவியாக அமைகின்றது.

இவ்வாறு வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி சுட்டிக்காட்டினார்.

கடந்த திங்கட்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் மருந்துச் சிகிச்சை நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற அந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றுகையில் வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி தெரிவித்ததாவது:

பொருளாதார மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக கஷ்டப்படும் எமது மக்களுக்கு இன்று திறந்துவைக்கப்படும் புற்றுநோய் மருந்து சிகிச்சை நிலையம் பேருதவியாக அமைகிறது.

புற்றுநோயாளர்கள் இதுவரை கொழும்புக்குச் சிகிச்சைக்காக செல்லவேண்டிய சூழ்நிலை இருந்தது. தமது அன்றாட வாழ்வுக்கே கஷ்டப்படும் வேளையில் வெளியிடங்களுக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டிய நிலையில் ஒரு நோயாளர் எவ்வளவு கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்பது அனைவரும் அறிந்ததே.

மருந்து, கதிர்வீச்சு, உளவியல் ரீதியான சிகிச்சைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள இந்த நிலையத்தினூடாக மேலும் பயனளிக்கக்கூடிய வசதிகள் ஏற்படவேண்டும்.

இங்கு நலவக்கூடிய பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துப் பணியாற்றும் வைத்திய அதிகாரிகள், ஏனைய உத்தியோகத்தர்களின் சேவையை நாங்கள் பெரிதும் பாராட்டுகின்றோம் - என்றார். (202-111)

## நாளாந்த சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்13

சிவலிங்க யோககேந்திரா நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று தொடக்கம் எதிர்வரும் 18ஆம் திகதி வரை பிற்பகல் 3 மணிக்கு சொற்பொழிவு நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை 'அம்பிகையை சரண் அடைந்தால் அதிகவரம் பெறலாம்' என்னும் தலைப்பிலும், எதிர்வரும் 16ஆம் திகதி 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்னும் தலைப்பிலும், எதிர்வரும் 18ஆம் திகதி 'ஆலயங்கள் உணர்த்தும் ஆன்மீகம்' என்னும் தலைப்பிலும் சி.சசீவன் சொற்பொழிவாற்றுவார்.

நாளை சனிக்கிழமை 'தாயிற் சிறந்த தயவான தத்துவன்' என்னும் தலைப்பிலும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 'நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி' என்னும் தலைப்பிலும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 'வணங்காத் தலைவந்து எனக்கிங்கு வாய்த்ததுவே' என்னும் தலைப்பில் சைவப் புலவர் நா.நவராஜ் சொற்பொழிவாற்றுவார். (202)



*கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் சின்னம் சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றது.*

*நிகழ்வில் யாழ்.றோட்டரிக் கழகத் தலைவர் றொட்டேரியன் க.பாலசுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரி அதிபர் கே.ஆர்.இராஜசேகரம், யாழ்.றோட்டரிக் கழக உப தலைவர் ஏ.பஞ்சலிங்கம், செயலாளர் மீரா தர்மகுலசிங்கம், கல்லூரி இன்ரறக்ட் கழக ஆலோசகர் நிரூபா அருந்தவம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.*

## உரும்பிராயில் சட்ட விரோதமாக மின்இணைப்பு பெற்றிருந்த 31 பேர் வசமாகச் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

உரும்பிராய்ப் பகுதியில் சட்டவிரோதமாக மின் இணைப்புப் பெற்றிருந்த 31 பேர் மின்சார சபையினரிடம் வசமாகச் சிக்கினர்.

உரும்பிராய், ஊரெழு, கரம்பன் ஆகிய பிரதேசங்களில் கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் பிரதேச மின்சார சபையினரும் கோப்பாய் பொலிஸாரும் இணைந்து திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன்போது சட்டவிரோதமாக மின் இணைப்புப் பெற்றிருந்த 31 பேர் அகப்பட்டனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். குறிப்பிட்ட நபர்களை சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி வழக்கு விசாரணையை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (202)

## 14 பன்றிகள் ஒரே நேரத்தில் கிணற்றில் வீழ்ந்து மரணம்

வடமராட்சி,ஜூன்13

ஒரே நேரத்தில் 14 பன்றிகள் வீட்டுக் கிணற்றுக்குள் வீழ்ந்து பலியாகின.

இச்சம்பவம் புலோலி, உபயகதிர்காமம் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வல்லிபுரக் கோயில் - ஆனைவிழுந்தான் பகுதிகளில் உள்ள சிறுசிறு பற்றைக் காடுகளில் வாழும் பன்றிக் கூட்டம் நேற்றுமுன்தினம் அப்பகுதிகளிலிருந்து வெளியேறி அண்மையில் உள்ள ஊர்மனைக்குள் புகுந்து கொண்டு வீடொன்றுக்குள் புகுந்தது. அப்பன்றிக் கூட்டத்தில் 14 பன்றிகள் ஒரேயடியாக கிணற்றுக்குள் விழுந்து தண்ணீரில் மூழ்கிப் பலியாகின.

எஞ்சிய 6 பன்றிகள் தனியே நின்று தத்தளித்தபோது குறிப்பிட்ட வீட்டுக்காரரின் உதவியினால் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றன. (202-236)




## ஜி.சி.ஈ மாணவர்களுக்கு வழிகாட்டல் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 13

சுன்னாகம் ஜயனார் இளைஞர் கழகம் நடத்தும் ஜி.சீ.ஈ சாதாரணதர மாணவர்களுக்கானகணித பாட வழிகாட்டல் பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இராமநாதன் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மண்டபங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளது.

மேற்படி இளைஞர் கழகம் உடுவில், தெல்லிப்பழைப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 பாடசாலைகளின் ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களுக்கு வழிகாட்டல் பரீட்சைகளை வருடாந்தம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202)

## தமிழ்த்தினப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் அமைச்சர் டக்ளஸினால் பாராட்டிக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்13

ஏனைய மாவட்டங்களை விட மாறுபட்ட பிரச்சினைகளைக் கொண்டிருக்கும் யாழ்.மாவட்டத்தில் வசதி வாய்ப்புக்கள் குறைந்த நிலையில் 2007ஆம் வருட அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் பங்கு பற்றி சாதனை படைத்துள்ள யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களின் திறமைகளை கண்டு தான் பெரிதும் மகிழ்ச்சி அடைவதாகச் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

2007ஆம் வருட அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ். மாவட்டப் பாடசாலைகளின் மாணவ, மாணவிகளைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் இடம் பெற்ற விசேட வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்த சூழ்நிலைக்குள் வாழ்ந்து தங்களது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மாணவர்கள் தங்களுக்கான எதிர்காலம் அமைதியானதாக உருவாக ஏதுவான வகையில் தங்களது செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து எமது சமுதாயத்தின் முன்னேற்றம் கருதி சரியானதும் நடைமுறை சாத்தியமானதுமான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.



2007 அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய கரவெட்டி மாணிக்கவாசகர், வேம்படி மகளிர், அருணோதயா, இந்துக் கல்லூரி, மகாஜனா, மத் திய கல்லூரி, இந்து மகளிர், ஹாட்லிக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பாராட்டப்பட்டதுடன் அவர்களை ஊக்குவிக்கும் முகமாக அன்பளிப்புக்களும் அமைச்சரால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மேற்படி பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாவட்ட மற்றும் வலய கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மாணவர்கள் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் கலந்துகொள்வதற்காக கொழும்பு சென்றிருந்தவேளை கொழும்பில் இவர்களுக்கான பல்வேறு வசதிகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (1)

## தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஜூன்13

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அனைத்தையும் புனரமைப்புச் செய்யும் பணிகள் பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் பின்வரும் திகதிகளில் சங்கங்களின் புனரமைப்புக் கூட்டங்கள் அந்தந்த இடங்களில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு மீசாலை வடக்கு கி.ச. சங்கம், பிற்பகல் 3 மணிக்கு கைதடி- நாவற்குழி மாதர் கி.அ.சங்கம்-

நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு கெற்பேலி மாதர் கி.அ.சங்கம் பிற்பகல் 2 மணிக்கு வரணி வடக்கு மாதர் கிராம அ.சங்கம்-

எதிர்வரும் 22ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு விடத்தற்பளை மாதர் கி.அ.சங்கம் பிற்பகல் 2 மணிக்கு வரணி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் புனரமைப்பு கூட்டங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 29ஆம் திகதி நாற்குழி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் சி.உமாபாலன் தெரிவித்தார்.

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் புதிய யாப்பின் பிரகாரம் இதுவரை 40 சங்கங்களின் விவரங்கள் பதிவுக்கு அனுப்பப்பட்டு 20 சங்கங்களுக்கு புதிய பதிவு இலக்கம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பிரதேசத்தில் 65 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் 45 கிராம அபிவிருத்திச் சங்கங்களும் இயங்குவது குறிப்பிடத்தக்கது. (202-237)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவனத்தில் கடமையாற்றும்
சுனில் றஞ்சித் ஹெட்டி ஆராச்சி
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி D.A.அனுலாவதி ஹெட்டி ஆராச்சி
அவர்கள் காலமான செய்தி கேட்டு
துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிளைகள்
யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி, நெல்லியடி,
வெள்ளவத்தை.

த பினான்ஸ் கம்பனி .PLC,
பிராந்திய முகாமையாளர்,
சக பணியாளர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர் (இராசதுரை)

[இளைப்பாறிய ஆசிரியர், மாத்தளை புனித தோமையார் கல்லூரி, யாழ்.சேன்.ஜேம்ஸ் ம.வி., வவுனியா அ.த.க.பாடசாலை]



அச்சக வீதி, நீக்கோதேமுஸ் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், மிருசுவிலை வசிப்பிடமாகவும் தற்போது 841, ஆஸ்பத்திரி வீதியில் வசித்தவருமான அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர் நேற்று (12.06.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விக்டோரியா (இராசமணி) அன்புக் கணவரும் அன்ரன் இளங்கோ, திருமதி பேபி அமலநாதன், திருமதி திரேசாஜெயவதி அன்ரன் (ஆசிரியர், வடக்கு மிருசுவில் - அ.த.க.பாடசாலை), லிகோரி வரதராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமலநாதன் (மிருசுவில்), அன்ரன் (மாதகல்), ராணி (கரம்பன்) ஆகியோரின் அன்பு மாமனும் அ.பெனடிக்மரியாம்பிள்ளை (இளைப்பாறிய பிரதம லிகிதர், யாழ்.மாநகரசபை) யின் அன்புச் சகோதரனும் லாவனியா, அனோஜ், திசான், யுகான், டொறின்னா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (14.06,2008) சனிக்கிழமை காலை 9 மணியளவில் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்ரன் இளங்கோ (மகன்)
077 3131426,
077 3583782

841, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (75286)

### ஆறுமுகம் சீனிவாசகம் இராஜரத்தினம்

[கல்வித்திணைக்கள லிகிதர் மற்றும் குடியகல்வு, குடிவரவு திணைக்கள ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்]



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் இராஜரத்தினம் (09.06.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சீனிவாசகம் முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற உருக்குமணி, கமலம் ஆகியோரின் அன்புக் கணவரும் சிறீஸ்கந்தராசா (லண்டன்), சிறிகதிர்காமர் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, முருகையா, செல்வரத்தினம், கனகரத்தினம் மற்றும் கணேன், பாலச்சந்திரன், சிவநேசம், நாகலட்சுமி, சிவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பகீரதி (லண்டன்), குகவதனா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் விஷு, சபிதா,மேனன, ராம் ஆகியோரின் அன் புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தனகஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கருணைநாயகம்,
பொ.தம்பிராசா.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (சி/553309)

### D.A.அனுலாவதி ஹெட்டி ஆராச்சி



றாகமையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அனுலாவதி ஹெட்டி ஆராச்சி நேற்று (12.06.2008) வியாழக்கிழமை றாகமையில் காலமானார்.

அன்னார் ஹென்றிபியசேன ஹெட்டி ஆராச்சியின் பாசமிகு மனைவியும் உபாலி ஹெட்டி ஆராச்சி, சுனில்ரஞ்சித் ஹெட்டி ஆராச்சி, அனுரா ஹெட்டி ஆராச்சி, சுதர்மா ஹெட்டி ஆராச்சி ஆகியோரின் அன்புத் தாயும் சந்தானலக்சுமி (சுசி) இன் அன்பு மாமியும் பிரதீபன், பிரசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2008) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் றாகம இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் றாகம ஹீன்கெந்த பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுனில் (மகன்)
[சுனில் ஆட்ஸ் த பினான்ஸ் கம்பனி, யாழ்ப்பாணம்]

627, துடுவேகெதர,
றாகம.
23, ஈச்சமோட்டை,யாழ்ப்பாணம்.
0774137597 (75287)

# புலிகளை ஊக்குவிக்கும் விதத்தில் ரணில் இந்தியாவில் கருத்துக் கூறியுள்ளாராம்!

## இலங்கை அரசு கண்டனம்

கொழும்பு, ஜூன் 13

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவில் வைத்து ஊடகங்களுக்குத் தெரிவித்த - இலங்கை அரசு தொடர்பான - கருத்துகளுக்கு இலங்கை அரசு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

'பயங்கரவாதத்திற்கு எதிராக அரசு முன்கொண்டு செல்லும் யுத்தத்தில் அரசு தோல்வியடைந்துள்ளது' - என்ற சாரப்பட ரணில் இந்தியாவில் வைத்துத் தெரிவித்த கருத்துக்கே அரசு கண்டனம் வெளியிட்டிருக்கின்றது.

இவ்வாறான - பொறுப்பற்ற - கூற்றுகள் புலிகளைப் பலமடையச் செய்யவே வழிவகுக்கும் என்றும் அரசு மேலும் தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சரும் அரச பாதுகாப்புத் துறைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெலவே அரசின் சார்பில் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட அரசு முன்னெடுத்துச் செல்லும் இந்த யுத்தம் மிக முக்கியமானது. இது பயங்கரவாதத்தை ஒழிப்பதோடு நாட்டு மக்களின் உரிமையையும் தேசிய இறைமையையும் பாதுகாத்துள்ளது.

இவ்வாறான யுத்தத்திற்கு எதிராகச் செயற்படுவதும் கருத்துகள் வெளியிடுவதும் தேசத்துரோகச் செயலாகும். அவை புலிகளைப் பலப்படுத்தவே உதவும்.

அவ்வாறான செயற்பாடுகளில்தான் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார்.

கடந்த வாரம் இந்தியா சென்ற அவர் இலங்கை அரசு முன்கொண்டு செல்லும் யுத்தத்திற்கு எதிராக அங்கு வைத்துக் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

'பயங்கரவாதத்தை ஒழிக்கும் யுத்தத்தில் அரசு தோல்வியடைந்துள்ளது' என்று அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் இந்தக் கூற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றார். (சி)

## சிறுவர் செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன்13

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாம் செயலமர்வும் பெற்றோருக்கான விழிப் புணர்வுக் கருத்தரங்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்ட இந்த நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் குறித்த நேரத்தில் நடைபெறுமென வலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202-302)

## 'இராமநாதம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் ஜூன்13

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஜி. சி .ஈ உயர்தர மாணவர் மன்றத்தின் 'இராமநாதம்' நூல் வெளியீடு இன்று வெள்ளிக் கிழமை பி.ப ஒரு மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது .

செல்வி சி. அங்கவை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (202)

## விளையாட்டுவிழா

புத்தூர்கிழக்கு மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் ஆறு முன்பள்ளிகள் ஒன்றிணைந்த விளையாட்டு விழா இன்றுவெள்ளிக்கிழமை பி.ப. 1மணிக்கு குமர குருபரன் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி க.லலிதா தேவி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் த.தியாகமூர்த்தி பிரதம விருந் தினராகக் கலந்து கொள்வார்.

## வெற்றிடமாக உள்ள அட்டவணைப்படுத்தப்படாத ஆளணிகளை நிரப்புதல்

வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தில் கீழ்வரும் அட்டவணைப் படுத்தப்படாத ஆளணிகளை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விவரங்கள் பின்வருமாறு அமையும்.

| பதவி | தன்மை | தகைமைகள் |
|---|---|---|
| 1. காரியாலய காரிய சகாயக்கா | நிரந்தரம் | 1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். |
| 2. பதிவேட்டுக்காப்பாளர் | நிரந்தரம் | 2. வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| | | 3. 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும் |
| | | 4. நன்னடத்தையும் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும் |
| | | 5. தரம் 08இல் சித்தியெய்தியிருக்க வேண்டும் |

வல்வெட்டித்துறை நகராட்சிமன்றப் பணிமனையிலுள்ள விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டிருக்கும் விண்ணப்பத்திற்கு அமைய விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு 25.06.2008ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண் ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை. (சி/553307)

கு.அரசிரதலிங்கம்,
செயலாளர்.

## சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம் கிராமிய வங்கிகளின் மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 2006/2007 இற்கான வருடாந்தக் கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இணுவில், சுன்னாகம், ஏழாலை, குப்பிளான் ஆகிய கிராமிய வங்கிகளின் வாடிக்கையாளர்கள் கீழ்க்காட்டப்பட்ட திகதிகளில் கிராமிய வங்கிகளிலுள்ள தங்களின் மீதிகளைச் சரிபார்த்துக் கொள்ளும் பொருட்டு தங்களின் கையேட்டுப் புத்தகங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள் ஆகியவற்றை நேரில் சமர்ப்பித்து, மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| கிராமிய வங்கியின் பெயர் திகதி | கையேடு உறுதிப்படுத்தும் இடம் |
|---|---|
| இணுவில் கிராமிய வங்கி 13.06.2008 வெள்ளி | இணுவில் கிராமிய வங்கி மு.ப. 9.30 - பி.ப. 3 வரை |
| சுன்னாகம் கிராமிய வங்கி 13.06.2008 வெள்ளி | சுன்னாகம் கிராமியவங்கி மு.ப. 9.30 - பி.ப. 3 வரை |
| ஏழாலை கிராமிய வங்கி 16.06.2008 திங்கள் | ஏழாலை கிராமியவங்கி மு.ப. 9.30 - பி.ப. 3 வரை |
| குப்பிளான் கிராமியவங்கி 17.06.2008 செவ்வாய் | குப்பிளான் கிராமியவங்கி மு.ப. 9.30 - 3 வரை |

சி.குமரவேல்
தலைவர்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்

11.06.2008 (சி/553305)


# CAD & BS

DIPLOMA IN COMPUTER AIDED DRAFTING AND BUILDING STUDIES



கட்டடத்தொழில். நுட்பவியலாளர்கள், கட்டடத்தொழில் நுட்ப மாணவர்கள், க.பொ.த (உ/த) கற்றோர் கவனத்திற்கு! உங்களுக்காகவே நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கதக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறி.

| | |
|---|---|
| Starts on | 21st June 2008 at 10.00 a.m. |
| Duration | 6 months (Part Time) |

Course Objective :
Sufficient background knowledge to those who seek employment as CAD Draftsman or Supervisor/ Technician, and/or want to proceed his/her studies in the field and, an in-depth knowledge to those who are already employed in the field in such categories.

Course Contents :
- Building Technology
- Construction Materials
- Building Services
- Building Drawings
- Quantity Surveying
- Basic Theory of Structures
- Computer Aided Drafting

IIS CITY CAMPUS
No. 200, Sivan Pannai Road, Jaffna.
Tel : 021 222 8060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டை நிறைவு செய்த பெருமையுடன் கல்வி ஒளியைப் பரப்பும் பிரதான பணியைத் தொடர்கிறது பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்



பாடசாலை அதிபர்
வே.சிவசுந்தரம்

பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், கல்வித்திணைக்களத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பினால் இந்தப் பாடசாலையை இவ்வளவு உயர்நிலைக்குக் கட்டியெழுப்ப முடிந்துள்ளது எனக் கூறுகிறார் பிரான்பற்று கலைமகள் வித்தியாலய அதிபர் வே.சிவ்சுந்தரம்.



பாடசாலையின் நூற்றாண்டையொட்டி அமைக்கப்பட்ட முகப்பு வளைவு

சென்ற ஆண்டில் தனது நூறாண்டை நிறைவு செய்துள்ள இப்பாடசாலை 1907ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பிரான்பற்றைச் சேர்ந்த வீரவாகுச் செட்டியார் கால்நடையாகச் சென்று யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் கல்வி கற்றார். தான் பெற்ற அறிவைத் தமது இளைய சந்ததியினருக்கு வழங்க எண்ணிய அவர் தமது வீட்டில் இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுத்தார். அவரது இந்த நற்செயலைக் கண்ணுற்ற ஊர்ப் பெரியவர்கள் ஒன்று சேர்ந்து சூரிய வைரவர் கோயிலுக்கு அருகில் ஓலைக் கொட்டிலொன்றை அமைத்து வீரவாகுச் செட்டியாரிடம் கையளித்தனர்.




மூன்றாண்டுகளின் பின்னர் 1910இல் தற்போது பாடசாலை அமைந்திருக்கும் இடத்தில் இரண்டரைப் பரப்புக் காணியை ஊர்மக்கள் அன்பளிப்பாக வழங்கி ஓலைக் கொட்டில் கட்டி திண்ணைப் பள்ளிக்கூடமாக உருவாக்கினர். 1919இல் அமெரிக்க மிஷனரியால் இப்பாடசாலை பொறுப்பேற்கப்பட்டு சுண்ணாம்புக் கட்டடம் அமைக்கப்பட்டதுடன் பிராம்பத்தை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை எனப் பெயரிடப்பட்டது. தரம் 5 வரை இயங்கிய இப்பாடசாலையின் அதிபராக இருந்த அந்தோனிப்பிள்ளை என்பவரது செயற்பாடுகள் பாடசாலையை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றதாக முதியவர்கள் பாராட்டுகின்றனர்.

விவசாயம், எண்ணெய் ஊற்றும் தொழில் என்பன சிறந்து விளங்கும் பிரான்பற்று கிராமத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரை கல்வி கற்கக் கூடிய பாடசாலை இல்லாத நிலையை மாற்ற எண்ணிய ஊர்ப்பிரமுகர்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாக 1985இல் தரம் 6 வகுப்பை ஆரம்பிக்க கல்வியமைச்சு அனுமதி வழங்கியது. தற்போது தரம் 11 வரையான வகுப்புகள் கொண்டதாக இப்பாடசாலை உள்ளது. பிராம்பத்தை அமெரிக்க மிஷன் பாடசாலையாக இருந்த இப்பாடசாலை 1987 முதல் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கி வருகிறது.

ஆண்களும் பெண்களும் கல்வி கற்கும் இப்பாடசாலையில் தற்போது மொத்தமாக 372 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஏழ்மையான குடும்பப் பின்னணியுடைய பிள்ளைகளே அதிகமுள்ளனர். இவர்களுக்குக் கற்பிக்கும் பணியில் அதிபர், உப அதிபருடன் 14 ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆசிரியர் பற்றாக்குறையை ஈடுசெய்ய தொண்டு அடிப்படையில் இரண்டு ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.



பாடசாலையில் இடம்பெற்ற சிறுவர்களின் நடன நிகழ்வு

பாடசாலைக்கான கட்டட வசதிகள் போதுமானதாக இல்லை. பழைய சுண்ணாம்புக் கட்டடத்துடன் 1999இல் நிறுவப்பட்ட 20x90 அடி கட்டடமும் போரூட் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 20x40 அடி கட்டடமும் 80'x20' அடி கட்டடமும் பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத்தால் உபகரிக்கப்பட்ட கட்டடமும் பிரதான கட்டடங்களாகும்.

சகல வசதிகளுடன் கூடிய இரு மாடி வகுப்பறைத் தொகுதியொன்றைக் கல்வித் திணைக்களம் அமைத்து வழங்கும் சாத்தியமுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆசிரியர் ஓய்வறை, விஞ்ஞான ஆய்வு கூடம், செயற்பாட்டறை முதலியவற்றைக் காணமுடியவில்லை. சிறியதொரு அறையில் நூலகம் இயங்குவதுடன் நடன அறையாகவும் அது பயன்படுத்தப்படுகின்றது. இருக்கும் வசதிகளுடன் பாடசாலையைச் செயற்படுத்தமுடிகிறது என்கிறார் பாடசாலை அதிபர்.

கல்வியிலும் விளையாட்டிலும் இங்குள்ள மாணவர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

## அதிபர், ஆசிரியர்களின் கூட்டுழைப்பு பிள்ளைகளை நல்வழிப்படுத்துகின்றது

2005இல் முதன்முதலில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி மாணவர்கள் முதல் வருடத்திலேயே 5ஏ3பி2சி என்ற உயர் பெறுபேற்றைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் புலமைப் பரிசில் பரீட்சையிலும் மாணவர்கள் சித்தியடைந்து வருகின்றனர்.

மெய்வன்மைப் போட்டிகளில் பாடசாலை, கோட்ட, வலய மட்டங்களில் பல பரிசில்களை இப்பாடசாலை மாணவர்கள் பெற்றுள்ளனர். அத்துடன் வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், மென்பந்து துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய பெரு விளையாட்டு அணிகளும் உருவாக்கப்பட்டு பல போட்டிகளில் பங்குபற்றியும் வெற்றி பெற்றும் உள்ளன.

சாரணர், குருளைச் சாரணர், பெண் சாரணியர், சிறு தோழியர் போன்ற இயக்கங்கள் பாடசாலையில் தோற்றுவிக்கப்பட்டு மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்களையும் பெற்றுள்ளன.

இப்பிரதேசப் பிள்ளைகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது இப்பாடசாலை. எமது கிராமத்தில் அறிவொளி பரப்பும் பிரதான பணியை இது ஆற்றுகிறது. அதிபர், ஆசிரியர்களின் கூட்டுழைப்பு எமது பிள்ளைகளை நல்வழிப்படுத்திக் கல்வியில் முன்னேற வைத்துள்ளது - எனப் பெற்றொருவர் தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் பாடசாலைச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றன. வெளிநாட்டில் வசிக்கின்ற இப்பாடசாலை மாணவர்கள் ஒன்றுசேர்ந்து நிதியுதவி நல்கினால் பல வேலைத்திட்டங்களைப் பாடசாலையில் நடைமுறைப் படுத்தலாம். ஏனைய நிறுவன உதவிகளை எதிர்பார்க்காமல் எமது பிள்ளைகளின் பணத்தில் எமது பாடசாலைக்கான வேலைகளைச் செய்தால் அது பாடசாலைக்கும் கிராமத்துக்கும் ஒரு சேரக் கிடைக்கும் பெருமையாகும் என்று பாடசாலை அதிபர் குறிப்பிட்டார்.

சுற்றிவரக் கோயில்களும் குடியிருப்புகளும் இணைந்த அமைதியான சூழலில் நூற்றாண்டை நிறைவுசெய்த பெருமையில் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் எழிலோடு காட்சியளிக்கிறது. அதன் கல்வியொளி பரப்பும் செயற்பாட்டிற்கு உறுதுணை புரிய வேண்டியது பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்குமுரிய பெரும் பொறுப்பாகும்.

எஸ்.எஸ்.குமரன்



தேசிய மட்ட தமிழ்மொழித் தினப் போட்டி - 2007இல் இலக்கணப் போட்டி பிரிவு 5இல் முதலாம் இடத்தைப் பெற்ற அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி கு.யஸ்மின் கிறிஸ்ரெலாவைப் படத்தில் காணலாம்.



அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட தெல்லிப்பழைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் விஞ்ஞான செய்முறை ஒன்றை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பிரதம விருந்தினரான வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், அதிபர் கு.ஜெகநாதன், விஞ்ஞானபாட ஆசிரியை திருமதி சாந்தி ஸ்ரீலவன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



பிரான்ஸ் வாழ் கைதடி உறவுகளின் அனுசரணையுடன் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம், பல்கலைக்கழகம், கல்வியியல் கல்லூரி ஆகியவைகளில் கல்வி கற்பதற்குத் தெரிவு செய்யப்பட்டோர் மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றை அண்மையில் நடத்தியது.

இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கைதடி விக்னேஸ்வராக வித்தியாலய அதிபர் ஆர்.ஞானலிங்கம் கல்வியியல் கல்லூரிக்குத் தெரிவான செல்வன் வை.விஜிதரனுக்கு பதக்கம் அணிவிப்பதனையும் அருகில் சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் [illegible] திருப்பதையும் படத்தில் காணலாம். (288)



ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழா பாடசாலை அதிபர் றொட்டேரியன் த.வாமதேவன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிவஸ்ரீ குகனேசக் குருக்கள், தென்னிந்திய திருச்சபை போதகர் கே.எஸ்.டபிள்யூ. தேவசகாயம், தேசிய வங்கி சுன்னாகம் கிளை அலுவலர்கள் பா.அருள்பாலமேனன், எஸ்.சுமணன் உட்பட பழைய மாணவர் மு.தர்மமூர்த்தி ஆகியோர் அதிபர், ஆசிரியர்கள் சகிதம் ஊர்வலமாக அழைத்து [illegible] படத்தில் காண[illegible]ம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாஷையூர் பதியில் இன்று தேரேறும் கோடி அற்புதர் புனித அந்தோனியார்



பதுவை நகர் பதியமர்ந்த அந்தோனி வாழ்க! வாழ்க!
பாலகனை கரம் தாங்கும் அந்தோனி வாழ்க! வாழ்க!
பலகோடி புதுமை செய்யும் அந்தோனி வாழ்க! வாழ்க!
பாஷையூரில் தேரேறும் அந்தோனி வாழ்க! வாழ்க!

கத்தோலிக்கத் திருச்சபையானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 13 ஆம் திகதி கோடி அற்புதர் என்று அழைக்கப்படும் புனித அந்தோனியாரின் பெருவிழாவை மகிழ்வோடு கொண்டாடுகின்றது. யாழ்.நகரின் கடற்கரை ஓரமாக பாஷையூர்ப் பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி இன, மத, மொழி வேறுபாடின்றி பக்தர்களுக்கு அருங்குறிகளும் அற்புதங்களும் செய்துவரும் புனித அந்தோனியாரின் பெருவிழா இன்று மகிழ்வோடு கொண்டாடப்படுகின்றது.

போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் 1195 ஆம் ஆண்டு புனித அந்தோனியார் பிறந்தார். தன்னுடைய இறுதி நாள்களில் இத்தாலி நாட்டின் பதுவை நகரில் இறையாட்சிப்பணி புரிந்தாலும், இவர் இறைபதம் அடைந்து இவரது உடல் பதுவை நகரில் நல்லடக்கம் செய்யப்படதாலும் பதுவை அந்தோனியார் என்று அழைக்கப்படுகின்றார். இவர் திருமுழுக்கு என்ற அருட்சாதனம் பெற்ற போது இவருக்கு சூட்டப்பட்ட பெயர் பெர்டினான்ட் என்பதாகும்.

பிரபுக்கள் குலத்தில் தோன்றிய இவர் தன்னுடைய15 ஆவது வயதில் அகஸ்ரினியன் சபையில் துறவியாக இணைந்து எட்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். கி.பி 1220 இல் மொரோக்கிவில் கிறிஸ்துவுக்காக இரத்தம் சிந்தி மறைசாட்சிகளாக உயிர் துறந்த பிரான்ஸிஸ்கன் சபைத் துறவிகளின் உடல்களை பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டபோது தானும் கிறிஸ்துவுக்காகக் குருதி சிந்த வேண்டும் என்ற தாகம் ஏற்பட 1221 ஆம் ஆண்டு தன்னை கப்புசின் சபையில் இணைத்துக்கொண்ட போது தன்னுடைய பெயரை அந்தோனி என மாற்றிக் கொண்டார்.

**வியப்புக்குரிய மறையுரையாளர்**

அசிசி நகரில் குருத்துவ திருநிலைப் படுத்தல் சடங்கொன்றில் எதிர்பாராத விதமாக மறையுரையாற்றும் வாய்ப்புக் கிடைத்தபோது தயக்கத்தோடு அதை ஏற்றுக் கொண்டாலும் பரிசுத்த ஆவியின் அருட்பொழிவும் அவரிடம் காணப்பட்ட மறை நூல் அறிவும் நாவன்மையும் கைகொடுக்க சபைத்தலைவர் வியக்கும் வகையில் மறையுரையாற்றியதால் தொடர்ந்து மறையுரையாற்றும் பணியும் துறவிகளுக்கு மறைக்கல்வி போதிக்கும் பணியும் ஒப்படைக்கப்பட்டது. நூற்றுக் கணக்கான பாவிகள் அவரின் மறையுரையால் கவரப்பட்டு மனமாற்றமடைந்து புனிதமான வாழ்வு வாழத் தொடங்கினர்.

**பாஷையூர் அந்தோனியார்**

*பழகு மொழியால் பரிந்து பாசை*
*யூர் அந்தோனி முனியை வேண்ட*
*இளகு மனமுடைய புனிதப் பெருமான்*
*இனிய வரங்களை ஈந்தெமக்கு*
*செழுமை மிகுந்த கல்வி செல்வம்*
*வீரமெல்லாம் தந்தருள் புரிபவரே!*
*மிளகு உப்பு மெழுகுவர்த்தி இவை*
*மூன்றும் உமக்கு காணிக்கையாக்கிடுவேன்*
*தகுதிப்பேற்றை தருவீரே ஐயனே!*

-இராம ஜெயபாலன்.

புனித அசிசியாரின் இறப்புக்குப் பின் இத்தாலி வரவழைக்கப்பட்ட புனித அந்தோனியார் தொடர்ந்து மறைபணியாற்றியதால் நோய்வாய்ப்பட்டார். பதுவை நகருக்கு அழைத்து வரப்படும் வழியில் 1231ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆம் திகதி அனைத்து திருவருட்சாதனங்களையும் பெற்றவராக தனது 36 வது வயதில் இறைபதம் அடைந்தார். சிறப்பாக இறைவாக்குரைத்த புனித அந்தோனியாரின் நாக்கு இன்றும் அழியாமல் இருப்பது அவருடைய புனிதமான இறைபணிக்குச் சான்றாகும்.

இறைபதம் அடைந்த மறு ஆண்டே திருப்பீடங்களில் வணங்கப்படத் தகுதி பெற்றவராக புனித அந்தோனியார் புனிதராக அறிவிக்கப்பட்டார். 1946 ஆம் ஆண்டு திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் ''மறைவல்லுனர்'' பட்டமளித்து இவரை பெருமைப்படுத்தினார். இவர் புனித வேதாகமம் கரம் தாங்கி இறைவேண்டல் செய்து கொண்டிருக்கும் போது குழந்தை யேசு இவரின் கரத்தில் வந்து அமர்ந்து இவரோடு உரையாடியதாகச் சான்றுகள் கூறுகின்றன.

**புதுமைகள் புரிந்தார்**

புனித அந்தோனியார் உயிர் வாழ்ந்த காலத்தில் பல அருங்குறிகள் செய்திருக்கின்றார். உயரமான கட்டடத்தில் தச்சு வேலை செய்து கொண்டிருந்த வேலையாள் தவறி வீழ்ந்த போது அவனை நிலத்தில் விழ விடாது அந்தரத்தில் நிறுத்தியது, நற்கருணையில் இறைமகன் யேசுவின் பிரசன்னம் உண்டு என்பதைக் கழுதையை வணங்கச் செய்ததன் மூலம் உறுதிப்படுத்தியமை போன்ற புதுமைகளைக் குறிப்பிடலாம்.

இன்றும் கூட புனித அந்தோனியார் பதியமர்ந்த ஆலயங்களை நாடி கத்தோலிக்கர் மட்டுமல்ல சமயவேறுபாடின்றி இந்துக்கள், முஸ்லிம்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் நாடி வந்து அவரிடம் மன்றாடி பரிந்துரைகளின் ஊடாக தமது குறைகள் நீங்கப் பெற்று மகிழ்வுறுவதை நாம் காணுகின்றோம். புனித அந்தோனியார் இவ்வுலகில் இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்து மரணத்தின் பின்னும் விண்ணுலகில் இறைவனோடு இணைந்து இருப்பதே அவரிடம் காணப்படும் வல்லமைக்கு காரணமாகும்.

இன்று பாஷையூர்ப் பதியிலே தேரேறி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பொழியும் புனித அந்தோனியாரிடம் எமது நாட்டின் நிலையான அமைதிக்காக பரிந்துரைக்க மன்றாடுவோம். அவரிடம் காணப்பட்ட இறைவனோடு இணைந்த வாழ்வை நாமும் கொண்டு வாழ முற்படுவோம்.

இ.அ.அமலரட்ணம்
பேராலயம்.


UNIVERSITY OF JAFFNA SRI LANKA

**VACANCIES - FACULTY OF SCIENCE**

**Asst. Lecturer (On Contract)/Demonstrator(On Contract)/ Instructor(On Contract)**

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the above mentioned posts upto **01.07.2008** in the disciplines of **Botany/ Chemistry/ Physics/ Zoology/ Mathematics/ Statistics/ Computer Science and in the Computer Unit.**

**Note: Candidates awaiting the degree results may also apply.**

| POST | SALARY SCALE |
|---|---|
| Asst. Lecturer | Rs,25,145/- per month fixed |
| Demonstrator/Instructor | Rs,20,755/- per month fixed |

Other allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs 100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/Postal order drawn in favour of the **"Bursar, University of Jaffna"** together with a self - addressed stamped envelop 23x30 cm, in size.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Head of the respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation. Only the sorted list of candidates will be called for the interview,

**REGISTRAR,**
University of Jaffna.
2008.06.11 (C/552300)


## விக்ரோறியாக் கல்லூரியில் சிரமதானம்

சுழிபுரம்,ஜூன்13

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள் இணைந்து தமது கல்லூரியில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். அத்துடன் பிரதான வாயில் முகப்பிற்கு வர்ணம் பூசியும் அழகுபடுத்தியுள்ளனர்.

கல்லூரி ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.(202-28)

## நாள்காட்டி வெளியீடு

சுழிபுரம்,ஜூன்13

பொது நிறுவனங்களின் அனுசரணையுடன் மெய்கண்டார் ஆதீனத்தின் நாள்காட்டி குடாநாட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

(202-28)


பதுவைப் புனிதர் அந்தோனியாரின்
வரலாற்றுச் சுருக்கமும் அற்புதங்களின் தொகுப்பும்
விற்பனைக்குண்டு






கிடைக்கும் இடங்கள்:
மானிப்பாய்
புனித அந்தோனியார்
கோயில் வளாகம்

பாசையூர்
புனித அந்தோனியார்
கோயில் வளாகம்

(75275)


## சொற்பொழிவாளர் கௌரவிப்பு

கொழும்புத்துறை,ஜூன்13

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற வருடாந்த பெருந்திருவிழாவில் தினமும் தொடர் சொற்பொழிவு ஆற்றிய இளம் சொற்பொழிவாளர் சிவஸ்ரீ. ச.இராரஜேஸ்வர சர்மா ''ஞானபானு'' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி ஆலய பரிபாலன சபைத் தலைவர் ஜெ.முத்துக்குமாரசாமி தலைமையில் கௌரவிப்பு விழா நடைபெற்றது. (202-224)


ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13.11.1970
மறைவு: 26.05.2007
திதி: 13.06.2008

அமரர் ஜெயராசா அருள்ரூபி (சுபாசினி)

ஒளி சொரிந்த வதனமொர்டு உதடுகளில் புன்சிரிப்பு
தெளிவான பேச்சாற்றல் சிந்தனையோடு சிகரம்தான்
கனிவாகக் கற்பித்துக் கல்விக்கே உரம்சேர்த்தீர்
மனிதமதை நேசித்து மனங்களிலே உறைகின்றீர்
வாடாமலராய் வாழும் வதனம் என்றும் மறையாதே.

ஆண்டொன்று சென்றாலும் உம் நினைவுகள் எம் மனதைவிட்டு அகலாது. உமது ஆத்மா சாந்தியடைய என்றென்றும் சந்நிதியானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ லங்கா வீதி,
உடுவில்.

உமது பிரிவால் வாடும்:
தாய்- இ.கனகமணி, சகோதரர்கள்.

(75198)



இயேசு சொன்னார் நான் நானே கர்த்தர் என்னையல்லாமல் ரட்சகர் இல்லை -ஏசாயா 43-13

இயேசுவின் சுவிசேஷ அக்கினி சபை
பிரதிட்டை ஆராதனை (திக்கம்)

காலம்: 14.06.2008 சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணிக்கு
இடம்: அல்வாய் வடமேற்கு (திக்கம்) வடிசாலை முன்பாக

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுப் பகுதியில் உள்ள சகல ஆவிக்குரிய திருச்சபை போதகர்கள் மூப்பர்கள், ஊழியர்கள் விசுவாசிகள் யாவரும் இந்த பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொண்டு தேவாசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படியாகவும் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படியாகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.


உண்மையுள்ள தேவபணியில்
எஸ்.எம்.ஸ்ரீபன்:
இயேசுவின் சுவிசேஷ அக்கினி சபை, கொக்குவில்.



Singapore Immigration இல் தெரிவு செய்யப்படும் மாணவர்கட்கு குறைந்த செலவில் சிங்கப்பூரில் உயர்கல்வி

நீங்கள் சிங்கப்பூரில் உயர்கல்வி கற்க விரும்புகிறீர்களா? 30.06.2008 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பத்தின் போது எந்தப் பணமும் செலுத்த வேண்டியதில்லை.
தொடர்பு: Study in India (0779905694)
பொன்னாலை வீதி, சிரணி சந்தி, மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே இடம்பெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை, சங்கானை பிரதேச செயலகக் கரப்பந்தாட்ட அணிகள் மோதிக்கொள்வதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம். அடுத்த படத்தில் இரு அணிகளும் தமது விளையாட்டு அலுவலர்கள், பயிற்சியாளர்களுடன் சேர்ந்து நிற்கின்றனர். (படங்கள்: நேசன்)

# கழகங்களுக்கிடையிலான கரபந்தாட்டப் போட்டி; மாவட்டச் சம்பியனாகியது சங்கானை செயலகம்

வலி.வடக்கு,ஜூன்13

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே இடம்பெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சங்கானைப் பிரதேச செயலகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் சங்கானைப் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் சிறப்பாக விளையாடியபோதிலும் முதல் சுற்றில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியின் விளையாட்டு குறைவாகவே காணப்பட்டது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் சுற்றை மிகவும் இலகுவாக வெற்றிபெற்ற சங்கானைப் பிரதேச செயலக அணி இரண்டாம் சுற்றை கடும் போட்டியின் மத்தியிலேயே வெல்லக்கூடியதாக இருந்தது.

முதல் இரண்டு சுற்றுக்களையும் சங்கானைப் பிரதேச செயலகம் 25:12, 26:24 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாவது சுற்று இரு அணிகளுக்கும் மிகவும் முக்கியமான சுற்றாகக் காணப்பட்டது. இந்தச் சுற்று சங்கானை பிரதேச செயலகத்திற்கு வெற்றிச் சுற்றாகவும் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திற்கு தொடர்ந்து வெற்றியை நோக்கிச் செல்வதற்கான வழியை ஏற்படுத்தும் சுற்றாகவும் காணப்பட்டன.

இதற்கு ஏற்ப தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியினர் மிகவும் நிதானமாக விளையாடி மூன்றாவது சுற்றை 25:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்று நான்காவது சுற்றை விளையாடியது.

நான்காவது சுற்றையும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்று இரு அணிகளும் முதல் நான்கு சுற்றுகளில் தலா இரண்டு சுற்றுகளை வென்று சமநிலையில் காணப்பட்டன.

ஐந்தாவதும் இறுதியானதுமான சுற்று இரு அணிகளுக்குமே மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் காணப்பட்டன. இரு அணிகளும் கடும் எதிர்பார்ப்புகளுடன் இறுதிச் சுற்றில் மோதியபோதிலும் சங்கானைப் பிரதேச செயலக அணி மிகவும் பொறுப்புணர்வுடன் விளையாடி வெற்றியை தமதாக்கிக் கொண்டது.

ஐந்தாவது சுற்று 15:08 புள்ளிகள் என்ற அடிப்படையில் சங்கானைப் பிரதேச செயலக அணியினர் வென்றதைத் தொடர்ந்து 03:02 சுற்றுகள் என்ற அடிப்படையில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியை வெற்றிகொண்டு மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

சங்கானைப் பிரதேச செயலக பெண்கள் அணி முதல் தடவையாக மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டமையும் சுட்டிக்காட்டக்கூடியதாகும். (1-86)

## அனலைதீவு மாணவன் ஈட்டி எறிதலில் சாதனை



யாழ்ப்பாணம்,ஜூன்13

மாவட்ட மட்ட மெய்வன்மைப் போட்டியில் 19 வயதுப் பிரிவு ஈட்டி எறிதலில் அனலைதீவு சதாசிவமகாவித்தியாலய மாணவன் திருச்செல்வம் கஜேந்திரன் முதலிடம் பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

இம்மாணவன் பத்தொன்பது வயதின் கீழ்ப்பிரிவில் தட்டெறிதல் நிகழ்விலும் மூன்றாம் இடத்தை மாவட்ட மட்டத்தில் பெற்றுள்ளார். இவர் கடந்த வருடம் மாவட்ட மட்டத்தில் பத்தொன்பது வய தின் கீழ்ப் பிரிவில் ஈட்டி எறிதல் நிகழ்வில் மூன்றாம் இடத்தையும் தட்டெறிதல் நிகழ்வில் இரண்டாம் இடத்தையும் பெற்றிருந்தார். தீவக வலயத்தின் சார்பில் இம்மாணவர் ஒருவரே இவ்வாண்டு முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (1)

# பாடசாலைகள் ஹொக்கிச் சுற்றுப்போட்டி

## ஆண்கள் – யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியன்

வலி.வடக்கு, ஜூன் 13

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல் லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதின.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகளுமே இப் போட் டியில் கலந்துகொண்டன.

முதல் சுற்றில் லீக் முறையில் இடம்பெற்ற போட்டிகளைத் தொடர்ந்து இறுதிப் போட்டியில் விளையாட யாழ்ப்பாணக் கல்லூரியும் யாழ்.மத்திய கல்லூரியும் தெரிவு செய்யப்பட்டன.

இரு அணிகளும் சமவலிமையுடன் விளையாடியதன் மூலம் போட்டி மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டன. போட்டி நிறைவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் யாழ்.மத்திய கல்லூரியை வெற்றிகொண்டு யாழ். மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி பெற்றுக்கொண்டது.

தேசிய மட்டத்திலான பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஹொக்கிப் போட்டியில் விளையாட இம்மூன்று கல்லூரிகளினதும் ஹொக்கி அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## பெண்கள் – உடுவில் மகளிர் கல்லூரி சம்பியன்

வலி.வடக்கு,ஜூன்13

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி தொடங்கிய நேரம் முதல் இரு அணிகளும் மிகவும் உற்சாகத்துடனும் போட்டியாகவும் மோதிக்கொண்டன. முதல்பாதி ஆட்டம் நிறைவு பெற்றபோது இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் சமநிலையில் காணப்பட்டன.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் அடித்து வெற்றி பெறவேண்டும் என்ற இலக்குடன் களமிறங்கி மோதிக்கொண்டன. இரு அணிகளும் மிகவும் நம்பிக்கையுடன் பந்தை நகர்த்தி கோல் பெற முயற்சித்தபோதிலும் எதிரணியினர் தடுத்து விளையாடியமையால் கோல்கள் பெறுவதில் இரு அணிகளும் சிரமங்களுக்கு உள்ளாகின.

இறுதி நிமிடத்தில் உடுவில் மகளிர் கல்லூரி ஒரு கோலைப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து 1:0 என்ற கோல்கணக்கில் யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றி பெற்றது.

உடுவில் மகளிர் கல்லூரி முதல் தடவையாகப் போட்டியொன்றில் இந்த முறையே கலந்துகொண்டுள்ளமையும் சுட்டிக்காட்டக்கூடியதாகும்.

இந்த இரண்டு அணிகளும் தேசிய மட்டத்தில் இடம்பெறவுள்ள பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஹொக்கிப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

# சாதனை படைக்கும் பாடசாலைகள்



யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணியினர், அதிபர், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுவிப்பாளருடன்.




வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே முதல் தடவையாக இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான கபடிப் போட்டியில் வலயச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட இணுவில் மத்திய கல்லூரியின் கபடி விளையாட்டு வீரர்கள் அதிபர், ஆசிரியர்களுடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம்.



பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு பெண்கள் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்ற அராலி அமெரிக்கன் மிஷன் பாடசாலை அணியினர் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மல்லாகம், நீலியம்பனை பெரிய தம்பிரான் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழாவும் தீமிதிப்பும் அண்மையில் இடம்பெற்றன.
அம்பாளுக்கு அபிஷேகம் செய்து படையல் செய்யப்பட்டிருப்பதை முதலாவது படத்தில் காணலாம்.
படையலுக்கான பொருள்களை அடியார்கள் தலையில் சுமந்து வருவதை இரண்டாவது படத்திலும், அடியவர் ஒருவர் தனது குழந்தையுடன் தீமிதித்து நேர்த்திக்கடன் செலுத்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.
*(படங்கள்: நேசன்)*

# மரணபயம்

இறைவனின் ஓர் அம்சமே சீவராசிகள். எமது உடலை வெறும் உடலாக நினைத்துப் பிறவி தோறும் இந்த உடலைப் பேண முடியாது என்று தெரிந்தும் நாம் முடிந்தளவு உயிர்வாழ முயற்சிக்கவே செய்கின்றோம். இந்த முடிவில்லாத முயற்சியில் இந்த உடல் ஒருநாள் அழியும் என்ற எண்ணம் உதித்திடின் மரணத்தினை நினைத்துப் பயப்படுகின்றோம். உலகம் முழுவதுமே மரணபயத்திற்கு ஆளாகிறது. ஆதலாற்றான் உலகம் நிலைக்கின்றது.

பிரம்மத்திற்குப் பயந்து அக்கினி எரிகிறது. அதனால் சூரியன் பிரகாசிக்கிறது. அதனால் உலகமே இயங்குகிறது என்கிறது உபநிடதம். நம்மைச் சுற்றிலும் இம் மரண விளையாட்டுத் தொடர்கிறது. நுண்ணிய கிருமிகள்(எச்.ஐ.வி) தொடக்கம் மிருகங்கள், மனிதர்கள் இரவு பகலாக அகப்பட்டதை உட்கொண்டு மரணத்தின் வாய்க்குள் ஓடிக் கொண்டே இருக்கின்றன. மனிதனின் படைப்பான கைக்கடிகாரம், கணனி - மரணம், மரணம் என இடைவிடாது தெரிவித்துக் கொண்டே இருக்கிறது.

இறைவன் இந்த இரகசியத்தை அறியுமாறு வைக்கவில்லை. இப்பரம இரகசியத்தைத் துருவி அறிந்தவர்களான யோகியர், முனிவர்கள் பற்றிப் பல கதைகள் அறிகின்றோம். ஆனால் அவர்களும் இறந்து விடுகின்றனர். எதிர்காலத்தைப் பார்க்க முடியாமை ஒரு விதத்தில் நல்லதுதான். அதனால்தான் உலகம் நிலைக்கிறது.

ஆசையும், பசியும் துரத்துகின்றன. மனிதன் தன் பகுத்தறிவுக்கு எட்டியபடி வாழ்க்கையின் பொருள் என்பதற்குரிய இரகசியம் அறியாதவனாக சாத்தியமில்லாத நம்பிக்கையுடன் வாழ்கின்றான். பிறப்பிற்கும் இறப்பிற்குமிடையே நிகழும் நிகழ்வுகள் இந்த உலகம் ஒரு நாடக மேடை என்பதைத் தெரிவிக்கின்றன. ஒரே பாத்திரத்தை பல்வேறு நடிகர்கள் பல்வேறு விதமாக நடிக்கிறார்கள். பயமும் சோகமும் எந்த அளவிற்கு எமது இன்பத்தைக் குறைத்துவிடுமோ என வருத்தம் ஏற்படுகிறது. மரணபயம் காரணமாக ஒரு கோடி முறை பிறந்து இறந்து விடுகிறோம். ''கோழைக்கும் ஆயிரம் முறை சா மனவலிமை உடையவர்க்கு ஒரேமுறைதான் சா' என்ற உண்மை உண்மையே. அவரே மாவீரர் ஆவர். உடம்பும் , உணவும் ஐம்பூதங்களின் படைப்புக்களே. ''நாம் எதையும் கொண்டு வரவில்லை. எதையும் கொண்டு செல்லப் போவதில்லை. ஆனால் விதிப்படி அது நடக்கிறது. எப்பவோ முடிந்த காரியம் ஒரு பொல்லாப்பும் இல்லை. முழுவதும் உண்மை நாமறியோம் ஆரறிவார்'' என்கிறார் யோகர் சுவாமிகள்.

ஞானக்கதிர்

உலகம் எம் காலடியில் பம்பரம் போலச் சுழல்கிறது. உயரத்தில் சூரியன், சந்திரன், கிரகங்கள் , நட்சத்திரங்கள் இயங்குகின்றன. நாமும் ஓடிக் கொண்டு இருப்போம். ஏன் பயந்து பயந்து சாக வேண்டும். நம் பார்வை தொலைதாண்டிச் செல்ல முடியாது. கண்ணுக்குப் படுவதை எடுத்துக் கொள்ள விழைகின்றோம். ஆனால் மரணத்தின் பின் என்ன ஆகும் என்பதை எவரும் கண்டுகொள்வதில்லை. ஆசை காரணமாக வேண்டாததற்கெல்லாம் பயப்படுகின்றோம். சரியானவை மட்டும் உறுதி செய், எது முக்கியமில்லை என்பதையும் கண்டறி. சரி, பிழை, பாவம், புண்ணியம், பிறப்பு,இறப்பு, வெற்றி, தோல்வி என்ற இரட்டைகளைத் தீர்மானம் செய்துகொண்டாற் கவலையின்றி, சந்தேகமின்றி, அச்சமின்றி, மரணபயமின்றி வாழ்க்கைப் பயணம் தொடரலாம்.

இப்பிறவி நாம் கேட்டுக்கிடைக்கப்பட்டதா மரணத்தை நாம் வரவழைக்க முடியும். இயற்கையாக வரும் ஒன்றை வலிந்து பெறுவதை உலகம் பிழை என்று கூறுகிறது. ஆழிப்பேரலை எவரையும் விட்டுவைக்கவில்லை. தான் நினைத்ததைச் சாதித்து விட்டு ஒய்வுபெற்றுள்ளது. அதிலும் சிலர் சாவில் இருந்து தப்பியும் உள்ளனர். மீண்டும் மீண்டும் ஏற்படவே செய்கிறது. முற்கூட்டியே அறியும் நிலை இருப்பினும் மனித உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. கரையைக் கடந்து வரும் கார் இருளை ஒத்த அலைகள் கட்டடங்கள், மரம் செடிகள் அணைகளைத் தளர்த்தித் துடைத்து விடுகிறது. இதனால் மரணபயம் வரவே செய்கிறது. 40-50 வருடங்கள் அறியாத காலம் போய் அடிக்கடி சுனாமி வரும் காலமாகி விட்டது. இது பல மில்லியன் டொலர் சேதத்தினை ஒரு சில நொடியில் ஏற்படுத்தி விடுகிறது. சுனாமி இயற்கையின் சீற்றம் என்றால் - மரணபயம் என்ன செய்யும். அச்சத்தோடுதான் வாழப் போகின்றோம்.

*(நன்றி: ஞானச்சுடர்)*

# யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் அழகியல் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். கல்வி வலயத்தினால் வலய ரீதியில் நடத்தப்பட்ட அழகியல் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வெற்றி பெற்ற பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் விவரம் வருமாறு:

**இசை**

*குழு:* வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தி, யாழ்: இந்து மகளிர் கல்லூரி

*தனி:* தெ.பவனுஜா (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), க.காயத்திரி (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), க.சுகிர்தா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

**நடனம்**

*குழு:* வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கொக்குவில் இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி .

*தனி:* இ.கஜனி (கனகரத்தினம் ம.ம.வித்தி), ந.பிரசாந்தினி (கனகரத்தினம் ம.ம.வித்தி), இ. செல்வப்பிரியா (திருக்குடும்ப கன்னியர் மடம்)

**சித்திரம்**

*பிரிவு -I:* ச.சஞ்சீவன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), இ.ராம்கி (யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி), செ.கமலாட்சன் (யாழ்.இந்துக்கல்லூரி)

*பிரிவு-II:* நா. ஐஸ்வரியா(யாழ். இந்து மகளிர் கல்லூரி), அ.கதிரினா (திருக் குடும்ப கன்னியர்மடம்),கிஜெயப்பிரியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) (202)


எம்புறோடிங் ரை



நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்
பாடசாலை மாணவர்களுக்குரிய ரை
69.00 விருந்து
எஸ் . எஸ். யசோதரன் ஆட்ஸ்
212,கோவில் வீதி, நல்லூர்


# தென்மராட்சி வலய ஆங்கிலதினப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான வலயமட்ட ஆங்கிலதின போட்டிகளில் வாய்மொழி மற்றும் எழுத்துப்போட்டிகள்நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] தெரிவித்தார். (202-207)


ஆவது 3 பிறந்த நாள் வாழ்த்து



அம்புலிராசா (பொபி) மற்றில்டா தம்பதியினரின் செல்வப் புதல்வி
மேரி செலீனாவின்
தனது 3 ஆவது பிறந்தநாள் (13.06.2008)
கொண்டாட்டம் : நாளை (14.06.2008) சனிக்கிழமை பி.ப. 3 மணி தொடக்கம்
வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தொட்டப்பா குலராசா, தொட்டம்மா கில்டா (கனடா), பெரியப்பா, பெரியம்மா, (ஜோன்சன் - புளோறா) (பிரான்ஸ்), அண்ணன் லக்சன் (பிரான்ஸ்) மாமி கொன்ஸ்ரீனா (பிரான்ஸ்), மாமா றொசான் (பிரான்ஸ்).
தகவல்: பெப்பி மற்றில்டா (தாய்)
மேரி செலீனா



(75244) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.






# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 13

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பெருந்திருவிழாவின் இறுதி நாளான இன்று காலை 5.15 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 6.30 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருவிழாக் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

மாலை 4 மணிக்கு புனிதரின் திருச்சொரூபப் பவனி இடம் பெறும். (202)

யாழ்ப்பாணம், ஜூன் 13

சாவகச்சேரி, சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-323)

யாழ்ப்பாணம், ஜூன் 13

சாவகச்சேரி இலஞ்சியம்பதி மண்டுவில் சோலை அம்மன் ஆலயப் பெருந்திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-323)

# தொழிற்பயிற்சி வழங்க விசேட திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்13

குடாநாட்டில் தனித்தனியாக இயங்கி வருகின்ற தொழிற்பயிற்சி நிலையங்களை ஒன்றாக இணைத்து அதன் மூலமான பயன்பாடுகளை உரிய முறையிலும் உரிய வகையிலும் பயிற்சியாளர்களுக்கு வழங்க சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் தற்பொழுது குடாநாட்டில் வெவ்வேறாக இயங்கி வருகின்ற இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இலங்கைத் தொழிற் திணைக்களம் மற்றும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்ற பிரதேச தொழில்நுட்ப பயிற்சி நிலையம் போன்றவற்றை சமூக சேவை அமைச்சின் கீழான பிரதேச தொழில் நுட்ப பயிற்சி நிலையத்தின் கீழ் ஒன்றிணைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி பயிற்சி நிலையங்களானது யாழ்.குடாநாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய், கரவெட்டி, சாவகச்சேரி மற்றும் வேலணை ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டு அந்தந்தப் பகுதிகளின் வளங்களை முன்னிலைப்படுத்தி தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதே நேரம் தொழிற் பயிற்சி நிறுவனங்களை இவ்வாறு ஒருங்கிணைப்பதன் மூலம் பிரிந்திருந்த வளங்களை ஒருமுகப்படுத்தி தொழிற்பயிற்சி பெறுநர்களுக்கான உரிய பயன்களை அதிகபட்ச அளவில் வழங்க முடியும் என்பதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எதிர்பார்ப்பு எனத் தெரிவிக்கப்பட்டது. (1)


சேவை நலன் பாராட்டு



திரு.க.பாக்கியநாதன்
யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் நீண்ட காலமாகச் சேவையாற்றி 15.06.2008இல் ஓய்வுபெறும் திரு.க.பாக்கியநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.
நலன்புரிக் கழகம்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(சி/553195)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள நிபந்தனைகள் நிறைவு செய்யப்படுமா?

நாட்டில் மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கு இடமளித்து, அதர்ம ஆட்சிக்கு வழி செய்து நிற்கும் இந்த அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நாசூக்கான வார்த்தைகளில் சில விடயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

✱அரசுத் தரப்புடன் சேர்ந்து இயங்கும் துணைப் படைக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்.

✱ நாட்டில் மனித உரிமைகளைப் பேணுவதற்கு நியாயமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதற்காக அரசு தனது தற்போதைய செயற்போக்கை அடியோடு மாற்றுவதுடன், அதனை வெளிப்படையாக வெளிப்படுத்திக்காட்டவும் வேண்டும்.

✱ செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, ஐ.நா. தொண்டர் அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் போன்றவை தமது மனித நேயப் பணிகளை ஆற்றுவதற்கான மார்க்கங்களைத் தடை விதிக்காமல் அரசு திறந்துவிட வேண்டும்.

- இதுபோன்ற - நியாயமான - அர்த்த பூர்வமான - விவகாரங்களைத் தனது கோரிக்கையாகவும், அதேசமயம் ஒரு புறத்தில் நிபந்தனை போன்றும் முன்வைத்திருக்கின்றது ஐரோப்பிய ஒன்றியம்.

போர் வெறித் தீவிரத்தில் மூர்க்கமாக நிற்கும் ஜனாதிபதி மஹிந்தரின் அரசு இந்தக் கோரிக்கைகளை ஏற்குமா, அவற்றை நிறைவு செய்யுமா என்பது கேள்விக்குறியே.

ஆனால் இந்த வேண்டுகோளுக்கு செவி சாய்க்காமல், 'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்' என்பது போல, போர் மோகத்தில் அரசு விடாப்பிடியாக நிற்குமானால் - ஐரோப்பிய ஒன்றியத்தின் வற்புறுத்தல்கள் 'செவிடன் காதில் ஊதிய சங்காக' நிராகரிக்கப்படுமானால் - இலங் கைத் தீவு மோசமானதும் விபரீதமானதுமான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருப்பது தவிர்க்க முடியாததாகும் என்பது தெளிவு.

இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியம்தான் இலங்கையின் மிகப் பெரிய பொருளாதார சகா. இலங்கையின் உற்பத்தி ஏற்றுமதியில் 37.5 சதவீதம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கானது என்பதால், இலங்கை போன்ற அபிவிருத்தியை எதிர்நோக்கும் மூன்றாம் மண்டல நாடு ஒன்று தனது பொருளாதார நிலையை ஸ்திரமாகப் பேணுவதற்கு இத்தகைய வலுக்கூடிய சர்வதேசத் தரப்புகளைத் தாஜா செய்து சமாளித்துச் செல்வது மிக முக்கியமாகும்.

அதேவேளை, இலங்கையின் ஆடை உற்பத்திகளை இறக்குமதி செய்வது உட்படப் பல்வேறு விடயங்களுக்குத் தான் வழங்கி வந்த 'ஜி.எஸ்.பி. பிளஸ்' என்ற இறக்குமதி வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் நீடித்து இலங்கைக்கு வழங்குவதா என்று மறுபரிசீலனை செய்யும் இந்தச் சமயத்தில் மேற்படி நிபந்தனைகளை அது முன்வைத்திருக்கின்றது.

இலங்கைக்கான இந்த இறக்குமதி வரிச்சலுகை நீடிப்புத் தீர்மானிப்பு விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் நியாயமாக நடந்து கொள்ளும் என்று இப்போதும் கூறப்பட்டு வந்தாலும் -

இலங்கையில் மனித உரிமைகளை மதித்துப் பேணி நிலைநிறுத்துவதில் இலங்கை அரசு ஆக்கபூர்வமான செயற்போக்கை வெளிப்படுத்தாத வரை அந்த வசதியை - சலுகையை - ஐரோப்பிய ஒன்றியம் நீடிப்பதற்கான சாத்தியங்கள் மிக மிகக் குறைவு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இந்தச் சலுகை நீடிப்பை ஐரோப்பிய ஒன்றியம் வெட்டுமானால் இலங்கையில் ஆடை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சுமார் மூன்றரை லட்சம் பேர் - அவர்களில் பெரும்பாலானோர் இளம் யுவதிகள் - வேலையிழந்து வீதிக்கு வருவார்கள். பல நூற்றுக்கணக்கான ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகள் இழுத்து மூடப்படும். வருடாந்தம் பல்லாயிரம் கோடி ரூபா ஏற்றுமதி வருமான இழப்பை இலங்கை ஒரேயடியாகச் சந்திக்கும்.

சுருங்கக் கூறுவதானால் இலங்கையின் பொருளாதாரமே மரம் போல சாய்ந்து படுத்து விடும்.

ஏற்கனவே விலைவாசி ஏற்றம், பணவீக்கம், வாழ்க்கைச் செலவு உயர்வு என்று எகிறும் பொருளாதார நெருக்கடிகளினால் துவண்டு போய்க் கிடக்கும் இலங்கைத் தீவை, இத்தகைய 'ஜி.எஸ்.பி. பிளஸ்' சலுகை இழப்பும் சேர்ந்து நிரந்தரமாக மீளமுடியாத அதல பாதாளத்தில் வீழ்த்திவிடும்.

இதுதான் இன்றைய யதார்த்தப் புறநிலைமையாகும். கள நிலைவரமாகும்.

ஆனாலும் வானமே இடிந்து வீழ்ந்தாலும் போர்த் தீவிரத்திலிருந்து விலகோம் என்று ஒரே பிடிவாதமாக நிற்கும் இலங்கை ஆட்சியாளர்கள் - குறிப்பாக 'ராஜபக்ஷ அண்ட் பிறதர்ஸ் கம்பனி' - அந்தப் போர்த் தீவிரப் போக்கின் பிரிக்க முடியாத அங்கமாகியிருக்கும் மோசமான மனித உரிமை மீறல் செயற்போக்கை விட்டுக் கொடுத்து மாறப் போவதில்லை என்பதும் தெளிவே.

ஆட்சிச் சகோதரர்களின் முழு அரசியலே இந்தப் போர்த் தீவிரப் போக்கில்தான் தங்கியிருக்கின்றது. அதிலிருந்து மீண்டால் அவர்களுக்கு தென்னிலங்கை அரசியலில் இடமேயில்லை என்றளவுக்கு நிலைமையை அவர்களே வளர்த்துக்கொண்டு விட்டார்கள்.

வெள்ளத்தில் கறுப்புத் திறணையாக மிதந்து வந்த கரடியைத் தெரியாமல் கட்டிப்பிடித்தவன், பின்னர் 'நான் விட்டாலும் அது விடுவதாக இல்லை' என்று கத்துவது போல -

இன்று போர்த் தீவிரப் போக்கை வரித்துக்கொண்ட இந்த அரசுத் தலைமை, இப்போது அதிலிருந்து விலக முயன்றாலும், அதை விட முடியாத நிலையில் - அது விடுவதாக இல்லை என்ற சூழலில் - அத்தீவிரத்தைத் தொடர்ந்து பேண வேண்டியதாகச் சிக்கிக் கொண்டுள்ளது.

அந்தப் பின்புலத்தில் ஐரோப்பிய ஒன்றியம் இப்போது விடுத்துள்ள நிபந்தனைகளை இலங்கைத் தரப்பு நிறைவு செய்வது என்பது துர்லபமே.

# மீன்பிடித்தடை தற்காலிகமானது; பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்

## யாழ். மாவட்ட தளபதி தகவல்

யாழ்ப்பாணம், ஜூன்13

குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மீன்பிடித்தடை தற்காலிகமானதே. விரைவில் மீனவர்கள் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்படுவர்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி இப்படிக் கூறினார்.

பலாலியில் ஊடகவியலாளர்களுடன் நேற்று முன்தினம் இடம் பெற்ற சந்திப்பில் அவர் இப்படித் தெரிவித்தார்.

தற்சமயம் நடைமுறைப்படுத்தப்படும் மீன்பிடித்தடையால் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது எமக்குத் தெரியும்.

அவர்களுடன் கவலையைப் பகிர்ந்து கொள்கிறோம். விரைவில் - சாதகமான சூழல் உருவாகும் போது மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

தொழிற்தடையால் பாதிக்கப்பட்டுள்ள மீனவக்குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

நிவாரணம் வழங்குவது தொடர்பாக அரச அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளேன். விரைவில் நிவாரணம் வழங்கப்படும் - என்றார் தளபதி. (1)

# புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியுள்ளோரை வாரம் ஒரு தடவை பெற்றோர் சந்திக்க வசதி

யாழ்ப்பாணம், ஜூன் 13

தெல்லிப்பழையில் அமைந்துள்ள புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியுள்ள 54 பேரையும் அவர்களது பெற்றோர் வாரத்தில் ஒரு தடவை சந்திக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி இத் தகவலைத் தெரிவித்தார்.

விடுதலைப்புலி அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் 54 பேர் படையினரிடம் சரண் அடைந்துள்ளனர். அவர்களுக்கு தற்சமயம் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களில் 12 பேர் தமது பெற்றோருடன் இணைந்து வாழ விரும்புகிறார்கள். அவர்களுக்கான பயிற்சி முடிவடைந்ததும் அவர்கள் பெற்றோருடன் சேர்க்கப்படுவர்.

அங்குள்ள ஒருவர் உயர்கல்வி பெற வாய்ப்பு அளிக்குமாறு கோரினார். அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மற்றொருவர் மத்தியகிழக்கு நாட்டுக்கு செல்ல விரும்பினார். அதற்கான ஏற்பாடு எம்மால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

அங்குள்ளவர்களுக்கு தேவையான உணவு, உடுபுடவைகள் வழங்கப்படுகின்றது. தங்கியுள்ளவர்களின் மறுவாழவுக்கு புனர்வாழ்வு ஆணையாளர் கம்லத் வேண்டிய உதவிகளை வழங்கி வருகிறார்- என்றார் அவர்.

இந் நிலையத்துக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் அடிக்கடி வருகை தந்து தங்கியுள்ளவர்களுடன் கலந்துரையாடி வரு கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (1)

# ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி 135 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று

ஊர்காவற்றுறை, ஜூன் 13

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் நூற்றி முப்பத்தைந்தாவது ஆண்டு விழா இன்று வெள்ளிக்கிழமை கல்லூரியின் அதிபர் ஜே.ஜேசுதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவையொட்டி அண்மையில் பாடசாலை மாணவர்கள் இடையே மரதன் ஓட்டம், பெண்களுக்கான சமநிலையோட்டம் ஆசிரியைகளுக்கிடையிலான தடைதாண் டல் ஓட்டம் ஆசிரியர்களுக்கிடையிலான சங்கீதக் கதிரை ஆகிய போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இன்றைய தினம் இடம்பெறும் கல்லூரிதின விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன.

புனித அந்தோனியார் திருச் சொரூபமொன்று பாடசாலை வளாகத்தில் அதற்கென அமைக்கப்பட்ட விசேட தூபியில் இன்று நிறுவப்படும். இதற்கான ஆராதனைகள் அருட்திரு எம்.சோபன்றூபஸ் அடிகளார் தலைமையில் நடைபெறும். (202-127)

### பொதுநலவாய மாநாட்டில் வற்புறுத்தல்

# அரசுகளுடன் மட்டும்தான் ஐ.நா. இணைந்து பணியாற்ற வேண்டும்

## அரச சார்பற்ற அமைப்புகளுடன் அல்ல என்கிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, ஜூன் 13

''ஐக்கிய நாடுகளும் அதன் அமைப்புகளும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசுகளுடன் நேரடியாக இணைந்து பணியாற்ற வேண்டும். அரச சார்பற்ற அமைப்புகளுடன் அல்ல! ''- இப்படி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டனில் பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புகள் தமது சொந்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதிலேயே ஆர்வமாக உள்ளன எனக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி ராஜபக்ஷ, அரச சார்பற்ற அமைப்புகளின் சொந்த நிகழ்ச்சி நிரல், மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசின் நிகழ்ச்சி நிரலிற்கு எதிரானதாக அமைந்து விடுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

லண்டனில் நடைபெறும் பொது நலவாயத் தலைவர்களின் மாநாட்டின் நிறைவேற்று அமர்வுகளின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கருத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த அமர்வுகளுக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படாத போதிலும், வெளியிடப்பட்டுள்ள ஆவணங்கள்மூலம்இவ்விடயம்தெரியவந்துள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு-தேர்தலில் மக்களால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கின்றது. இதன் காரணமாக சில திட்டங்களை நடைமுறைப்படுத்த அதற்கு ஆணையுள்ளது என்றும் இலங்கை ஜனாதிபதி அங்கு சுட்டிக்காட்டியிருக்கிறார். (சி)

# திருத்த வேலைகளுக்காக குறிப்பிட்ட இடங்களில் நாளை மின்தடை

யாழ்ப்பாணம் ஜூன் 13

திருத்த வேலைகள் காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை குறிப்பிட்ட சில இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலேயே நாளை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (202)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 32 | 14.06.2008 சனிக்கிழமை |
| திதி: | ஏகாதசி பிற்பகல் 4.12 |
| நட்சத்திரம் : | சித்திரை காலை 06.26 |
| | ஏகாதசி விரதம் |
| [illegible] : | 02.53 - 04.23 |
| [illegible] | 08.53 - 10.23 |

## மஞ்சத்தமர் அம்மையே!



ஆழ்கட லோரத்திலே நயினைப் பதியினிலே
எல்லோர்க்கும் காட்சிதர மஞ்சத்தமர் அம்மையே!
நாடிகின்றா ரடியார்கள் அக்கரைக்கு அக்கறையாய்
சோகங்கள் நீக்கிடுவாய் நாகபூஷணியே என்று
வாழ்வின்று வளமிழந்து வேதனையில் வாடுவதால்
வேண்டுகிறோம் நாள்தோறும் நிம்மதியை - அதற்கு
தூளாக்கி துயரனைத்தும் மலரவைப்பா யமைதியென்று
தயவோடு கோருகின்றோம் தந்திடுக அம்மையே!

- குளப்பிட்டி க.அருணைநாயகம்.

## பார்வதியே மஞ்சத்தில் வாரீர் அம்மா!

கடல் அலையில் ''ஓம் சக்தி'' என்ற நாமம்
கலந்துவரத் தென்றலது தழுவிமேவ,
தடதடவெனக் கொம்பரெலாம் உணர்சி பொங்க
ஓங்கிவளர் வேம்பினங்கள் கூத்துமாட
திடல் நடுவே நிழலாடு கூடும் தொண்டர்
திரண்டிருந்து தோத்திரங்கள் இசைத்துப்பாட
நாடிவர நையினையிலே கோயில் கொண்டு
சீலமுறு தெய்வீகக் காட்சி நல்கி (ப்)
படமெடுத்து ஐந்துதலை நாகம் ஆட (ப்)
பார்வதியே மஞ்சத்தில் வாரீர் அம்மா!

- நயினை ச.சங்கர...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும்பொருட்டு 14.06.2008 சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம்.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
12.06.2008

"சூழல் மற்றும் அபிவிருத்தி
வேலைகளுக்கு க் கைகொடுக்கும்"
இலங்கை மின்சாரசபை.

(சி/553303)

## வாகனப் பத்திரங்கள் தவறிவிட்டது

ஆறுமுகம் சபாநாயகம் என்பவருடைய 'யமகா' மோட்டார் சைக்கிளின் 2008 வாகனவரி, காப்புறுதிப் பத்திரம் ஆகியன நீர்வேலி தெற்கு, நீர்வேலி என்னும் விலாசத்திலும் இராணுவ அனுமதி J/194 இணுவில் தெற்கு என்னும் விலாசத்திலும் உள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஆ.சபாநாயகம் இளைப்பாறிய அதிபர், இணுவில் தெற்கு, இணுவில் என்னும் விலாசத்திற்கு அனுப்பி உதவவும். (75283)

## விற்பனைக்கு

32, 10, 6, 3 KW ஆகிய டீசல் ஜெனரேற்றர்களும் வேறு பலதரப்பட்ட டீசல் இயந்திரங்களும் விற்பனைக்குண்டு.

மூர்த்தி,
சிவன் வீதி, பரவைக்குளம்,
திருநெல்வேலி. (75272)

## கண்ணீர் அஞ்சலி



கடந்த (16.05.2008) அன்று
இறைபதமடைந்த யாழ்.மாவட்ட
புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக பிரதம
பொதுமுகாமைத்துவ உதவியாளரும்
நலன்புரிக் கழக உறுப்பினருமாகிய
திருமதி ரேவதி பாலேந்திரன்
அவர்களின் அன்புத் தாய்
அமரர் அம்பலவாணர்
சிவஞானவதி

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்ட செயலக நலன்புரிக் கழகம்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(சி/553308)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் சமூகஜோதி
கா.கணேசதாசன்
சைவபரிபாலன சபையின்
நீண்டகால ஆயுள் உறுப்பினரும்
நிர்வாக சபை உறுப்பினருமான
அன்னாரின் அமரத்துவச் செய்தி
கேட்டுத் துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா இறையடி
சேர பிரார்த்திக்கின்றோம்.

(75281)

சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

## சிறுவர் கழகங்களுக்கு பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்12

தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் ஐந்து சிறுவர் கழகங்களுக்கும் இரண்டு பாலர் பகல் பராமரிப்பு நிலையத்திற்கும் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

ஜேர்மன் தொழில்நுட்ப வலய நிறுவனத்தினர் இப்பொருள்களை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கையளித்துள்ளனர்.

சிறுவர் கழகங்களுக்கு புத்தகங்களும் புத்தக வினாக்களும், பாலர் பகல் பராமரிப்பு நிலையங்களின் சிறார்களுக்கு சப்பாத்துகள், பிளாஸ்ரிக் வாளிகள், சாப்பாட்டுத் தட்டுகள், துவாய்கள், விளையாட்டு உபகரணங்கள் ஆகியவையும் வழங்கப்படவுள்ளன. (202-207)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
சின்னத்தம்பி
சுப்பிரமணியம்

மலர்வு:07.04.1924
உதிர்வு: 14.05.2008

கடந்த 14.05.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (13.06.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குருந்தடி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (75277)

குடும்பத்தினர்.

## குடாநாட்டில் வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

குடாநாட்டில் வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளதால் பாவனையாளர்கள் சிரமப்படுகின்றனர்.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் போன்ற பிரதான சந்தைகளில் வெங்காயம் கிலோ 150 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது.

சின்ன வெங்காயம் இவ்வாறு திடீரென விலை அதிகரித்திருப்பதாலும் ஏனைய மரக்கறி வகைகளின் விலை ஏற்றத்தினாலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வெங்காயத்தின் இந்த விலையேற்றம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த போகத்தின் போது குடாநாட்டில் வெங்காய செய்கையில் விவசாயிகள் அதிக நாட்டம் காட்டாமையே இந்த விலை அதிகரிப்புக்கு காரணம் என்று தெரி க்கப்பட்டது. (202-224)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிர்வாக பொறுப்பாளர்
லோகராசா மோகன்ராஜ்
அவர்களின் மறைவினால்
துயருற்று இருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (75279)

நாகரெட்ணம் & Co
உரிமையாளரும்
ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



கூடி வாழ்ந்தோம்
கூடித் திரிந்தோம்
கூடிச் சிரித்து மகிழ்ந்தோம்
ஆனால் கூடித் திரிவதற்கோ,
சிரிப்பதற்கோ இன்று
நீ இல்லையோ நண்பா!

எமது அன்புக்குரிய இனிய நண்பன்
லோகராசா மோகன்ராஜ்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எனது இதயத்திலிருந்து ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (75280)

நந்தன் -நண்பன்
(உரிமையாளர்: ரூபன் வீடியோ சென்ரர்).

## சுற்றாடல் பாட செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் ஆரம்பப்பிரிவுமாணவர்களுக்கான சுற்றாடல் பாடத்தின் விஞ்ஞான செயல்முறைப் பட்டறை நாளை சனிக்கிழமையும் மறு நாள் ஞாயிற்றுக்கிழமையுமாக இரண்டு தினங்கள் நடைபெறும்.

காலை 8.30 மணிக்கு ஆளிவள நிலையத்தில் நடைபெறும். இந்த செயல்முறைப் பட்டறையில் கோட்ட ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள்கலந்துகொள்வர்.

கோப்பாய் கோட்டத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி புதன் கிழமைநடைபெறும் எனவும் ஆரம்பப் பிரிவுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் தெரிவித்தார். (202-111)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணக மலர்வு
12 ✱ 04 ✱ 1948



விண்ணக விரைவு
10 ✱ 06 ✱ 2000

திருமதி கந்தசாமி அன்னலெட்சுமி
திதி: 13.06.2008

எத்தனை செல்வங்கள் வந்தாலும் எத்தனை இன்பங்கள் இருந்தாலும்
அத்தனையும் உங்களுக்கு நிகராகுமா? அம்மா! ஆண்டுகள் எட்டுச் சென்றாலும்
ஆறாத துயருடன் நீங்காத நினைவுகளை நெஞ்சில் நிறுத்தி
உங்கள் ஆத்மா சாந்திபெற நயினை நாகபூஷணித் தாயை இறைஞ்சுகின்றோம்.

7ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(75282)

தங்கள் நினைவில்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ — கண் நெகிழ

14 ✱ 05 ✱ 1960



13 ✱ 06 ✱ 2007

திருமதி
அந்தோனிப்பிள்ளை மேரி கொன்செப்ரா

எங்கள் நினைவுகளில் என்றும் நின்று
எம் குடும்பத்திற்கு ஒளியூட்டிய பேரொளி

எமை விட்டுச் சென்று ஆண்டொன்று போனதுவோ!
உம் பிரிவின் நீண்ட பயணத்தில்- கண்ணீரில்
நாம் கரைந்து எம் மனது தீயாகி எரிகிறது.

அம்மா செல்லுமிடமெல்லாம் உங்கள் பேச்சு
பல சிரிப்பொலிகள் கேட்கும் போது உங்கள் நினைப்பு

அம்மா எப்பொழுதும் உங்கள் கதை பேசி
உங்கள் நினைவுகளுடன் வாழச் செய்து விட்டீர்களே!

பிரிவெனும் சுமையை அவசரமாய்த் தந்து
உங்கள் நினைவுகளெனும் மடிதனிலே
நாம் தூங்கி எழச் செய்து விட்டது ஏனம்மா?

அம்மா ஆயிரம் முகங்களை விட
உங்கள் இதயம் மட்டும் போதுமானது
ஏங்கிடும் எம் உள்ளங்களின் ஏக்கத்தைத் தீர்க்க
நீங்கள் வரமுடியாது என உணர்ந்தும்,
எங்கள் மனம் உங்களை தேடுகின்றதே அம்மா!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்களின் அன்பிற்கு எதுவும் ஈடாகாது தெய்வமே!

அம்மா எம் இமைகளை மூடி
உம் அழகு விம்பத்தை சிறைப்பிடித்து
என்றும் எம் கண்முன் கொண்டு வாழ்வோம்
நாம் வாழ்ந்த வாழ்விற்கும்
வாழும் வாழ்விற்கும் பொருள் நீயே அம்மா.

30, 5ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (75274)

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூரோ கிண்ணக் கால்பந்தாட்டம்

# முன்னிலை பெற்றுக் கொடுத்தார் கிறிஸ்டியானோ றொனால்டோ செக் குடியரசை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தது போர்த்துக்கல்

ஜெனிவா, ஜூன் 13

2008ஆம் ஆண்டுக்கான யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதிக்குத் தகுதி பெறும் முதல் அணி என்ற பெருமையை போர்த்துக்கல் அணி பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் செக் குடியரசு அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியதன் மூலம் காலிறுதியை உறுதி செய்தது போர்த்துக்கல்.

தான் பெற்றுக் கொடுத்த கோல் மூலம் முன்னிலை பெற்ற போர்த்துக்கல் அணிக்கு, மேலும் ஒரு கோல் பெற உதவி புரிந்து வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார் கிறிஸ்டியானோ றொனால்டோ.

16 அணிகள் பங்கேற்கும் 13ஆவது ஐரோப்பியக் கிண்ணக் கால்பந்தாட்டம் சுவிற்ஸர்லாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் நடைபெறுவருகின்றது. நேற்றுமுன்தினம் சுவிற்ஸர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெற்ற 'ஏ' பிரிவுக்கான முக்கிய லீக் ஆட்டமொன்றில் போர்த்துக்கல் அணி, செக் குடியரசு அணியை எதிர்கொண்டது.

ஆட்டத்தின்தொடக்கத்திலிருந்தேஇருஅணி வீரர்களும் ஆக்ரோஷமாக ஆடினார்கள். எட்டிக்குப் போட்டியாக இரு அணி வீரர்களும் மோதியும் கொண்டார்கள். இந்நிலையில் - ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணிக்கு முதல் கோல் கிடைத்தது. செக் குடியரசின் கோல் காப்பாளர் பீற்றர் ஷெக்கை ஏமாற்றிக்கொண்டு அந்தக் கோலைப் பெற்றுக்கொடுத்தார் டீகோ.

பதில் கோலைப் போடுவதற்கு செக் குடியரசு வீரர்கள் துடிப்புடன் செயற்பட்டார்கள். இதற்கு உடன் பலன் கிடைத்தது. 9 நிமிடங்கள் கடந்த நிலையில் - ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் லிபர் சியான்கோ, செக் குடியரசு அணிக்கு முதல் கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

இரு அணிகளுமே தங்களது முதல் லீக் ஆட்டத்தில் வெற்றியைப் பதிவுசெய்திருந்ததால் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றால் காலிறுதியை உறுதிசெய்துவிடலாம் என்பதால் மிகவும் ஆக்ரோஷத்துடன் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். முதல் பாதியில் முன்னிலை பெறுவதற்கு இரு அணிகளாலும் முடியவில்லை. முயற்சிகள் எல்லாம் வீண்கோக முதல் பாதி 1-1 என்ற சமனிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் போர்த்துக்கல் வீரர்களின் ஆதிக்கம் கூடுதலாகவிருந்தது. இதனால் அவர்கள் பக்கமே பந்து கூடுதலாகவிருந்தது. செக் குடியரசு வீரர் சியான்கோ 62ஆவது நிமிடத்தில் கோல் அடிக்கக் கிடைத்த அரிய வாய்ப்பைத் தவறவிட்டார். அதன் பின்னர் - 63ஆவது நிமிடத்தில் கிறிஸ்டியானோ றொனால்டோ சுப்பர் கோல் அடித்து தனது அணியை முன்னிலைப்படுத்தினார்.

செக் குடியரசு வீரர்கள் கடுமையாகப் போராடியும் தங்களது அணியை முன்னுக்குக் கொண்டுவர முடியவில்லை. ஆட்டம் முடியும் தறுவாயில் - 90ஆவது நிமிடத்தில் றொனால்டோ கொடுத்த பரிமாற்றத்தை அற்புதமாகக் கோலாக்கினார் றிக்காடோ குவாரிஸ்மோ.

இறுதியில் போர்த்துக்கல் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றியைப் பதிவுசெய்தது. தனது முதல் லீக் ஆட்டத்தில் துருக்கியை வீழ்த்தியிருந்த போர்த்துக்கல் அணி, மொத்தம் 6 புள்ளிகளுடன் தனது பிரிவில் முதலிடத்தைப் பிடித்து காலிறுதிக்குத் தகுதிபெற்றது. எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்தில் போர்த்துக்கல் அணி சுவிற்ஸர்லாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.




# சொந்த மண்ணில் சுவிற்ஸர்லாந்துக்குச் சோகம் கைவிட்டுப் போனது காலிறுதிக்கான வாய்ப்பு



பாஸில், ஜூன் 13

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரை நடத்தும் நாடுகளில் ஒன்றான சுவிற்ஸர்லாந்துக்குச் சோகமே எஞ்சியுள்ளது. அந்த அணியின் காலிறுதி வாய்ப்பு அடியோடு இல்லாமல் போய்விட்டது.

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நடந்த லீக் ஆட்டத்தில் துருக்கி அணியிடம் 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியைத் தழுவியதன் மூலம் அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை சுவிற்ஸர்லாந்து இழந்துவிட்டது.

இந்த ஆட்டத்தின் 32ஆவது நிமிடத்தில் சுவிற்ஸர்லாந்து வீரர் ஹக்கன் ஜக்கின் ஆட்டத்தின் முதல் கோலைப் பெற்றுக்கொடுத்து தனது அணியை முன்னிலைப்படுத்தினார். பதில் கோல் அடிக்கப்படாமையினால் முதல் பாதி 1-0 என்ற சுவிற்ஸர்லாந்தின் முன்னிலையுடன் நிறைவுபெற்றது.

இரண்டாவது பாதியில் மழையின் குறுக்கீடு குறைந்தது. இரு அணி வீரர்களும் உத்வேகத்துடன் விளையாடினர். 57ஆவது நிமிடத்தில் துருக்கி வீரர் சென்ரேக் கோல் அடித்து ஆட்டத்தைச் சமனிலைப்படுத்தினார்.

முன்னிலை பெற இரு அணிகளும் கடுமையாகப் போராடின. இருந்தும் உடனடியாகப் பலன் கிடைக்கவில்லை. ஆட்டம் முடியும் தறுவாயில் - 90ஆவது நிமிடத்தில் துருக்கி வீரர் அந்ரே டூரன் அடித்த அற்புதமான கோல் சுவிற்ஸர்லாந்து ரசிகர்களின் எண்ணங்கள் மீது மண் அள்ளிப்போட்டது. இந்தக் கோல் மூலம் 2-1 என்ற முன்னிலையுடன் அபார வெற்றியைப் பதிவுசெய்த துருக்கி மூன்று புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது.

எதிர்வரும் 15ஆம் திகதி செக் குடியரசு - துருக்கி அணிகளுக்கிடையே நடைபெறும் 'ஏ' பிரிவுக்கான லீக் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி காலிறுதிக்கு முன்னேறும்.

## யூரோ கிண்ண லீக் ஆட்டமொன்றின் பிரதம விருந்தினராக யுவராஜ் சிங்

பேஸில், ஜூன் 13

யூரோ கிண்ண லீக் ஆட்டமொன்றின் பிரதம விருந்தினராக இந்தியக் கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் யுவராஜ் சிங் அழைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி சுவிற்ஸர்லாந்தின் பேஸில் நகரில் நடைபெறும் சுவிற்ஸர்லாந்து - போர்த்துக்கல் அணிகளுக்கு எதிரான லீக் ஆட்டத்திற்கே யுவராஜ் சிங் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார். போட்டியில் சிறப்பாட்டக்காரர் விருதை இவர் வழங்கிக் கௌரவிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பங்களாதேஷில் நடைபெற்று வரும் முத்தரப்புத் தொடரில் பங்கேற்றிருக்கும் யுவராஜ், நாளை தொடரின் இறுதியாட்டம் முடிந்த கையோடு சுவிற்ஸர்லாந்து பயணமாவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# புஷ் ஒரு துஷ்டர்

## காட்டமாக விமர்சிக்கிறார் ஈரான் ஜனாதிபதி



தெஹ்ரான், ஜூன் 13

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை ஒரு துஷ்டர் என வர்ணித்துள்ள ஈரான் ஜனாதிபதி அஹமதுநிஜாத். இஸ்லாமியக் குடியரசான ஈரான் நாட்டை அழிப்பதற்கு புஷ் தீட்டிய திட்டங்கள் எல்லாம் தற்போது தோல்வி கண்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈரானுக்கு எதிராகப் புதிய தடைகளை விதிக்கவேண்டும் என வலியுறுத்தி தனது ஐரோப்பியாவுக்கான கடைசி விஜயத்தை அமெரிக்க ஜனாதிபதி மேற்கொண்டிருக்கும் நிலையிலேயே ஈரான் ஜனாதிபதி அவரைக் காட்டமாக விமர்சித்துள்ளார். ஈரானின் மத்திய நகரில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் ஆயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்திருக்க அஹமது நிஜாத் உரையாற்றியிருந்தார்.

அப்போது, ஈரானை அழிக்க அணுத்திட்டத்தை புஷ் பயன்படுத்தினார் என்றும், அதில் அவர் படுதோல்வியே கண்டுள்ளார் என்றும் தெரிவித்தார். இஸ்லாமியக் குடியரசான ஈரானை அழிக்கும் தனது குறிக்கோளில் அவர் முற்று முழுதாகத் தோல்விகண்டுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

"அந்தத் துஷ்ட மனிதன் (புஷ்), ஈரானிய தேசத்தை அழிப்பதற்கு பல திட்டங்களைத் தீட்டினார். முதலில் ஆப்கானிஸ்தானுக்குப் படையெடுத்தார். பின்னர் ஈராக்கிற்குத் தனது படையை அனுப்பினார். மூன்றாவதாக ஈரானைத் தாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தார். நான் அவருக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். அந்த அல்லாஹ் (கடவுள்) எங்களுடன் இருக்கும் வரைக்கும் ஈரானின் ஒரு சென்ரிமீற்றர் பிரதேசத்தைக் கூட எதிரிகளால் ஆக்கிரமிக்க முடியாது. புஷ் என்ற துஷ்டரின் காலம் தற்போது முடிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றது." - என்றார் அஹமது நிஜாத்.

ஈரானின் யுரேனியச் செறிவூட்டல் நடவடிக்கையை அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் அணு ஆயுதத் தயாரிப்பின் முன்னோடி நடவடிக்கை எனக் குற்றம்சாட்டிவருகின்றன. ஆனால், அந்தக் குற்றச்சாட்டைக் காலம்காலமாக மறுத்துவரும் ஈரானியத் தலைவர்கள், மின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடனேயே யுரேனியம் செறிவூட்டல் நிகழ்ச்சியை தாங்கள் முன்னெடுத்து வருகின்றனர் என்று கூறிவருகின்றனர்.

அஹமதுநிஜாத் தொடர்ந்து பேசுகையில், "கடந்த 2, 3 வருடங்களாக நாங்கள் யுரேனியச் செறிவூட்டல் நிகழ்ச்சி நிரலை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றோம். அவர்கள் எங்களுடைய திட்டத்தை முறியடித்துவிடலாம் என்று நினைப்பார்களேயானால், அது மாபெரும் தவறு என்றுதான் நான் கூறுவேன். கடவுளின் துணையுடன் நாங்கள் பெரு வெற்றியைக் கண்டுவருகின்றோம். எதிரிகள் எங்களிடமிருந்து தூர ஓடிக் கொண்டிருக்கின்றார்கள்." - என்று கூறினார்.

# சிகிச்சைக்காக அமெரிக்கா புறப்பட்டார் ஷேக் ஹசீனா

டாக்கா, ஜூன் 13

சிறையிலிருந்து விடுதலையான பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, சிகிச்சை பெறுவதற்காக நேற்று லண்டன் வழியாக அமெரிக்கா புறப்பட்டார்.

வெளிநாடு சென்று மருத்துவ சிகிச்சை பெற பங்களாதேஷ் இடைக்கால அரசு வழங்கிய அனுமதியைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் ஹசீனா தடுப்புக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

ஷேக் ஹசீனா விடுவிப்புக்கு பின் பலத்த பாதுகாப்புடன் அவரது அவாமி லீக் கட்சி அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஹசீனா விடுதலையாவதை அறிந்து ஆதரவாளர்கள் அவரை வரவேற்பதற்காக கட்சி அலுவலகத்தில் உற்சாகமாகத் திரண்டிருந்தனர். ஆதரவாளர்களைப் பார்த்த ஹசீனா, மகிழ்ச்சி ஆரவாரத்தில் கையசைத்தார்.

"ஹசீனா 8 வாரம் வெளியில் இருக்க அனுமதி கிடைத்துள்ளது. அவரது சிகிச்சைக்கு இந்தக் காலம் போதுமானதாக இருக்கும். எனவே, சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லும் முன் அவர் கட்சிக் கூட்டம் எதிலும் கலந்து கொள்ளமாட்டார்." - என, ஹசீனாவின் வழக்கறிஞர் பாஷீல் நூர் தெரிவித்தார்.

இந் நிலையில் அவர் சிகிச்சை பெறுவதற்காக நேற்று டாக்காவிலிருந்து லண்டன் வழியாக அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.



அமெரிக்காவில் கண், காது ஆகியவற்றுக்கு அவர் சிகிச்சை பெற்றுக் கொள்வார். பின்னர், அங்கிருந்து புறப்பட்டு கனடாவில் உள்ள தனது மகளைக் காணச் செல்வார். கனடாவுக்கு செல்ல ஏற்கனவே விஸா பெற்றுள்ளார்.

ஹசீனாவின் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதையடுத்து, கடந்த ஆண்டு ஜூலை மாதம் அவருக்கு எதிராக பல்வேறு ஊழல் வழக்குகளைப் பதிவு செய்து சிறையில் அடைத்தனர். தற்போது 11 மாதங்களுக்குப் பிறகு அவர் சிகிச்சைக்காக விடுவிக்கப்பட்டுள்ளார்.

## இங்கிலாந்தில் அனாதையாகக் கிடந்த அல் - குவைதா குறித்த ஆவணங்கள்

லண்டன், ஜூன்.13

இங்கிலாந்து ரயிலில் அல்-குவைதா தொடர்பான இரகசிய ஆவணங்களை ஞாபக மறதியால் விட்டுச் சென்ற உள்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தீவிரவாதிகள் நடத்த இருக்கும் தாக்குதல் திட்டங்கள், அவர்களது இரகசிய முகாம்கள் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை இங்கிலாந்தின் புலனாய்வுத் துறை அலுவலகம் சேகரித்தது. அல்-குவைதாவின் சில இரகசிய ஆவணங்களை ஒரு உள்துறை அதிகாரி எடுத்துக் கொண்டு லண்டன் வந்து கொண்டிருந்தார்.

முக்கியமான அந்த ஆவணங்களை ரயிலிலேயே விட்டு விட்டு அந்த அதிகாரி கீழே இறங்கி விட்டார். ரயிலிலேயே அந்த ஆவணங்கள் அனாதையாகக் கிடந்தன. இதை ஒருவர் எடுத்து பி.பி.ஸி. செய்தி நிறுவனத்திடம் ஒப்படைத்தார். இதை உள்துறை அதிகாரி ஜேக்கல் ஸ்மித் வேண்டுமென்றே அதை தவற விட்டாரா? அல்லது அலட்சியமாக இருந்து விட்டாரா? என்பது குறித்து விசாரணை நடக்கிறது. தற்போது அந்த அதிகாரி தற்காலிகமாக பதவி நீக்கப்பட்டுள்ளார்.

## கடந்த மாதத்தில் 49 ஆயிரம் பேர் அமெரிக்காவில் வேலை இழப்பு

வொஷிங்டன், ஜூன்.13

அமெரிக்காவில் கடந்த ஒரே மாதத்தில் மட்டும் 49 ஆயிரம் பேர் வேலை இழந்துள்ளனர். கடந்த இருபதாண்டில் மிக அதிகம் பேர் வேலை இழந்தமை இதுவே முதன்முறையாகும்.

அமெரிக்காவில் பொருளாதாரச் சரிவு அதிகரித்து வருகிறது. 'யூரோ' நாணயத்துக்கு எதிராக டொலரின் மதிப்பு சரிந்து வருகிறது. பொருளாதாரச் சரிவால் வேலைவாய்ப்பின்மை எண்ணிக்கையும் அதிகமாகி வருகிறது.

வழக்கமாக வேலையில்லாதோர் எண்ணிக்கை 5.5 சதவீதம் அளவுக்கு அதிகரித்து வந்தது.

சமீபத்தில் 'புளூம்போர்க்' அமைப்பு எடுத்த கருத்துக்கணிப்பில், அடுத்த சில மாதங்களில் பொருளாதாரச் சரிவு அதிகரிக்கும். வேலையின்மை எண்ணிக்கையும் பல மடங்கு உயரும். பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 60 ஆயிரம் பேராக உயரும் - என்று தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டாஞ்சேனையில் இருவர் கடத்தப்பட்டனர்

கொழும்பு, ஜூன் 13

கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நபர்களால் இருவர் கடத்திச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அல்விஸ் ஒழுங்கையில் வசித்து வந்த - கிளிநொச்சியைச் சேர்ந்தவரான - வேலாயுதம் மதுரகுணசிங்கம் என்பவர் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மகாவித்தியாலய மாவத்தையில் அமைந்துள்ள சர்மிலா விடுதியில் தற்காலிக முகாமையாளராகப் பணியாற்றி வந்த நடராசமூர்த்தி கேதீஸ்வரன் (வயது - 28) என்பவரும் நேற்றுமுன்தினம் இரவு 10.40 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

பண்ணாகம் தெற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த இவர் வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் தங்கியிருந்தார் என்றும் -

56 - 5674 என்ற இலக்கத்தைக் கொண்ட வாகனத்தில் இராணுவச் சீருடை அணிந்து வந்த சிலர் இவரைக் கடத்திச் சென்றனர் என்றும் -

அவருடைய உறவினர் ஒருவர் மக்கள் கண்காணிப்புக் குழுவிலும் கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இருவர் விடுவிக்கப்பட்டனர்

அதேசமயம், கொழும்பு - 12 சென்றல் வீதியில் பலசரக்கு மொத்த விற்பனை நிலையத்தில் இருந்து கடந்த 6ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட பாலசிங்கம் அரியதீபன் (வயது - 26) என்பவர் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் கிராண்ட்பாஸ் லெயாட்ஸ் புறோட்வே வீதியில் வைத்து கடந்த 6ஆம் திகதி கடத்தப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி மாணவரான பரமசாமி கமலநாதன் (வயது - 23) என்பவர் நேற்றுக்காலை 10 மணியளவில் விடுவிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## வன்னிக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் ஹன்சன் பௌவர் வன்னிக்குச் செல்ல விரும்பினார். எனினும் நாங்கள் எதற்காக அவர் அங்கு செல்ல விரும்புகின்றார் என் பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என அவரிடம் கூறிவிட்டோம் என்று ரஜீவ விஜேசிங்க குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் தங்களை ஹன்ஸன் பௌவர் ஏன் சந்தித்துப் பேச்சு நடத்த வேண்டும் என்பதையும் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பௌவர் வன்னிக்குச் செல்வதையும், அவர்கள் அவருடன் சேர்ந்து புகைப்படமெடுத்த பின்னர், தமிழீழத்தின் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்டுள்ள துயரத்தைப் பார்வையிட போவர் வந்துள்ளார் எனத் தெரிவிப்பதையும் நாம் விரும்பவில்லை. அது பிரசாரம். அதனை அனுமதிக்க முடியாது என்றும் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நோர்வேயிடம் தெளிவான சமாதானத் திட்டம் இருக்கவேண்டுமென இலங்கை அரசு விரும்புகின்றது. ஜனநாயக அரசியல் தீர்விற்கு இட்டுச் செல்லும் சமாதானத் திட்டம் இல்லாதவரை விடுதலைப் புலிகளின் பேச்சுக்கான வேண்டுகோளை நம்ப முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையும், அர்ப்பணிப்பும் சமாதானத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமையவேண்டும். மேலும் ஆயுதங்களை ஒப்படைப்பதும் அதில் அடங்கியிருக்க வேண்டும். இந்தத் திட்டம் பேச்சு மூலமான அரசியல் தீர்விற்கான - நேர்மையான - அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது என நாம் நம்பவேண்டும் என்றும் தெரிவித்துள்ள விஜேசிங்க, ஆகக் குறைந்தது விடுதலைப் புலிகள் ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற உறுதி மொழியையாவது வழங்க வேண்டு மென்றும் கூறியுள்ளார். (சி)

# இலங்கையில் அப்பாவி மக்கள் பலியாவது கவலைக்குரியது என்கிறார் இந்தியப் பிரதமர்

புதுடில்லி, ஜூன் 13

இலங்கையில் 25 வருட காலத்துக்கும் மேலாகத் தொடரும் இனப்பிரச்சினை காரணமாக அப்பாவி மக்கள் பலியாகி வருவது மிகுந்த கவலையை அளிக்கின்றது.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இவ்வாறு தெரிவித்தார்.

அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் அவர் இவ்வாறு சொன்னார்.

இலங்கை உட்பட அயல் நாடுகளில் அமைதி நிலவ வேண்டியது இந்தியாவின் நலன்களுக்கு அத்தியாவசியம்.

### இந்திய வெளிநாட்டுக் கொள்கையுடன் சம்பந்தப்பட்டது இலங்கை இனப் பிரச்சினை

இலங்கை இனப்பிரச்சினையின் தாக்கம் தீவிரமடைவதன் மூலம் இந்தியாவுக்குப் பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதிகளவு அகதிகள் அங்கிருந்தும் வருகின்றனர். இதனால் இலங்கைக்கு மாத்திரமல்ல இந்தியாவுக்கும் நெருக்கடி ஏற்படுகிறது. இலங்கை இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாகும். மறுபுறம் அது இந்திய வெளிநாட்டுக் கொள்கையுடன் சம்பந்தப்பட்டதாக அமைந்து விடுகிறது. அயல் நாடுகளுடன் இந்தியா எப்போதும் சுமுக உறவைப் பேணவே விரும்புகிறது. அயல் நாடுகளும் தம்மை பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றே இந்தியா விரும்புகிறது. ஏனெனில் குறித்த நாடுகளின் பிரச்சினை இந்தியாவின் பிரச்சினையாக மாறியிருக்கின்றது - என்றார். (அ)

## கிராம சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களுக்கான கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என்று அரச அதிபர் தெரிவித்தார்.

நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதிகள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

* யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், கோப்பாய் - 23 ஆம் திகதி.
* வேலணை, உடுவில் - 24 ஆம் திகதி.
* நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, மருதங்கேணி - 25 ஆம் திகதி.

ஏனைய பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள், சித்தியடைந்தவர்களின் பட்டியல் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்றதும் நடத்தப்படும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (அ-1)

## காணாமற் போகச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மே மாதத்தில் மட்டும் இடம்பெற்றுள்ளன.

பெண்களும், மனிதாபிமானப் பணியாளர்களும் காணாமற் போதல் குறித்தும் செயற்குழு விசேட கவலை தெரிவித்துள்ளது.

### முறையிடப்படுவது குறைவு

மேலும் செயற்குழு குறிப்பிடும் இந்த எண்ணிக்கை உண்மையில் இடம்பெறும் சம்பவங்களின் எண்ணிக்கையை விட மிகக் குறைவானதாக இருக்கலாம்.

ஏனெனில், பழிவாங்கப்படுவது குறித்த அச்சம் காரணமாக இலங்கையில் இடம்பெறும் காணாமற் போதல் குறித்து முறையிடப்படுவதும் குறைவாகவுள்ளது.

பலவந்தமாகக் காணாமற்போகச் செய்தல் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு இணக்கம் தெரிவித்த போதிலும், அதில் சிறிதளவு முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று செயற்குழு குறை கூறியுள்ளது.

பலவந்தமாகக் காணாமற் போகச் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கும், முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கும் வலுவான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகளின் செயற்குழு இலங்கை அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும் தாமதமின்றி இலங்கைக்குத் தான் விஜயம் மேற்கொள்வதற்கான அனுமதியை விரைந்து வழங்கும்படியும் அது கோரியுள்ளது. (சி)

# சிற்பியின் பவள விழா; சிறுகதைத் தொகுதி வெளியீடு நாளை மறுதினம் ஞாயிறு ஸ்கந்தாவில்

யாழ்ப்பாணம், ஜூன் 13

மூத்த எழுத்தாளரும், இதழியலாளருமான சிற்பி - சிவசரவணபவனின் பவள விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

'ஞானம்' சஞ்சிகையின் அனுசரணையுடன் யாழ்.இலக்கிய வட்டம் நடத்தும் பவள விழாவுக்கு எழுத்தாளர் செங்கை ஆழியான் க.குணராசா தலைமை வகிப்பார்.

சிற்பியின் பவள விழா மலரை 'ஞானம்' சஞ்சிகை வெளியிடுகிறது. அதனைச் சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரன் பவளவிழா நாயகரிடம் கையளித்து வெளியிட்டு வைப்பார்.

அதனைத் தொடர்ந்து சிற்பி - சிவசரவண பவனின் 'நினைவுகள் மடிவதில்லை' என்ற சிறுகதைத் தொகுதி வெளியிடப்படும்.

விழாவில் தொடக்க உரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு .திருமுருகனும், வாழ்த்துரையை முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தனும் நிகழ்த்துவர்.

சிற்பியின் சிறுகதைத் தொகுதியை பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டு வைப்பார். முதற்பிரதியை லயன் செ.மகாதேவா பெற்றுக்கொள்வார். பாராட்டுரைகளை காலநிதி மனோன்மணி சண்முகதாஸ், கோப்பாய் ப.சிவம், கவிஞர் சு.துரைசிங்கம், ஐ.சாந்தன் ஆகியோர் நிகழ்த்துவர். (அ)

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## பிரபாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

பாதுகாப்புப் படையினர் முல்லைத்தீவுப் பகுதியை மீட்கும் நோக்கில் பல்வேறு முனைகளில் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்யும் முகமாகவே இந்தத் தாக் குதல்களை அவர்கள் மேற்கொண்டு வரு கின்றனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முல்லைத்தீவிலுள்ள பதுங்குகுழி ஒன்றிலேயே இருக்கின்றார்.

பிரபாகரன் மறைந்திருக்கும் முல்லைத்தீவிலுள்ள விடுதலைப்புலிகளின் முகாமை படையினர் சுற்றிவளைத்துள்ளனர். இராணுவத்தின் நான்கு பிரதான படையணிகள் இதில் ஈடுபட்டுள்ளன. இதனால் அவ்விடத்தை விட்டு தப்பிச் செல்ல முடியாமல் பிரபாகரன் அடைபட்டுள்ளார்.

இராணுவத்தின் 56, 57, 58 மற்றும் 59 ஆம் படையணியினர் முல்லைத்தீவு மாவட்டத்தை கைப்பற்றும் நோக்கில் படையெடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் படையெடுப்புக்களை மேலும் தீவிரப்படுத்துவதற்காக விசேட அதிரடிப்படையின் இரண்டாம் இலக்க படையணியினரும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

இவ்வாறானதொரு படையெடுப்பின் மூலமாகவே விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான 14 பேஸ் முகாம் படையினரால் கைப்பற்றப்பட்டது. இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு வருகை தந்தபோது பிரபாகரன் இம் முகாமிலேயே மறைந்திருந் துள்ளார். இந்திய இராணுவத்தினர் நாட்டை விட்டு வெளியேறியபோதிலும் இலங்கை பாதுகாப்பு படையினருக்கு பயந்து நிலத்தின் கீழ் மறைந்திருந்தாலும் படையினர் அவரை அடையாளம் கண்டுள்ளனர் - என்றார்.

# வவுனியா முன்னரங்கில் புதனன்று மோதல்

கொழும்பு, ஜூன்13

வவுனியா, குஞ்சுக்குளம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடுஞ்சமரில் இராணுவத்தினர் 19 பேர் உயிரிழக்க 23 பேர் வரை படுகாயமடைந்தனர் என்றும், தமது தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இச் சமர் நேற்றுமுன்தினம் காலை 6.30 மணி முதல் மாலை 7.30 மணிவரை இடம்பெற்றிருக்கின்றது.

குஞ்சுக்குளம் பகுதியை நோக்கி பிற்களச் சூட்டாதரவுடன் முன்னேற முயன்ற இராணுவத்தினர்மீது தாங்கள் மேற்கொண்ட முறியடிப்பு சமரை அடுத்து இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் தமது பழைய நிலைகளுக்குத் திரும்பிச் சென்றனர் என்றும் புலிகள் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

இதேவேளை மணலாறு, ஜானகபுர மற்றும் கிரிபென் வெவப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமரில் விடுதலைப் புலிகள் அறுவர் உயிரிழந்தனர் என்றும், ஒன்பது பேர் வரை காயமடைந்தனர் என்றும், தமது தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்றும், நான்கு பேர் வரை படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## யாழ்.நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்படுத்தப்படும் என்று பலாலி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஏனைய பகுதிகளில் இரவு 7மணி முதலே ஊரடங்கு வழமை போல் நடைமுறையில் இருக்கும். அந்தோனியார் உற்சவத்தை ஒட்டி நேற்றிரவும் யாழ்.நகரப் பகுதியில் இரவு 9மணி முதலே ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது (அ-01)

## தெஹிவளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 22 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 3மணி முதல் காலை 9 மணி வரை இச்சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்றும் தொடர்ந்தும் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர்களிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (சி)


கற்சுமி வெளியீடு
வரவு
EASY WAY
WAY TO WIN
TRY TO WIN
தரம் 3 - O/L வரையான
9ஆம் 10ஆம் கணித
வினாத்தாள்கள் பெறலாம்.
* பதிவு செய்தவர்கள் வரவும்.
கற்சுமி
166, நாவலர் வீதி, யாழ்

பொருளியல்
P.S.Kumar B.B.A (Hons)
Exam - 03
13.06.2008 (வெள்ளி)
9.30 a.m.
பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம். இணுவில்.

வந்துவிட்டது வெற்றித்தேர்வு !!
திருமலை.எஸ்.கணேசலிங்கம் அவர்களின்
தரம்: 5 வெற்றித்தேர்வு - 17
தரம் :4, 5 மாவட்ட வெற்றித்தேர்வுப் பரீட்சை
ஒவ்வொரு ஞாயிறும் 6am, 8am, 10am, 2pm, 4pm
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
மாணவர்கள் எவரும் பரீட்சை எழுதலாம்.
மேலதிக விபரங்களுக்கு. 0212229016.

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
BIOLOGY
மனிதனும் சூழலும்
ஆரம்பம்- 14.06.2008
Sat, Sun (4.00-5.30 p.m.)
சு.பொன்நிலவன்

THE SCIENCE CORNER
Clock tower lane, Jaffna.
CHMISTRY - 2008
இரசாயன இயக்கவியல்
ஆரம்பம் - 14.06.2008
SAT,SUN
BY S.RAJAH

PHYSICS
நிலையியல்
ஆரம்பம்-14.06.08
சனி - 5p.m
(சனி, ஞாயிறு- 5-6 p.m.)
K.Selvan
NAVALAR
Anaipanthy, Jaffna.

மானிப்பாய்
தூய அந்தோனியார் ஆலயத்திருவிழா
15.06.2008
14 - 06 - 2008 நற்கருணைத் திருவிழா - மாலை 3.45 மணிக்கு
15 - 06 - 2008 முதல் திருப்பலி காலை 5.30
திருநாள் திருப்பலி காலை 7.15
இறை ஆசீர் பெற அன்புடன் அழைக்கின்றோம்.
பங்குத்தந்தை.
(75278)




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org